www.padippakam.com
இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

වෙළියීඩු: 33 | 20 மார்கழி 1996 | விலை: ரூபா 7.00

# சூடு பிடித்திருக்கும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்

"புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவதாக இருந்தால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்குத் தயார்"

– ஜனாதிபதி சந்திரிகா

"மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி நாம் ஒரு வருடத்துக்கு முன்பே கூறியிருக்கிறோம்"

– மாவீரர் தினச் செய்தியில் பிரபாகரன்

"பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்க வெளிநாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன, இதை அரசாங்கம் ஏன் பரிசீலனை செய்யக்கூடாது?"

– ஐ.தே.க. எம்.பி. ரொனி டீ மெல்

"மத்தியஸ்தம் செய்ய வெளிநாடுகள் முன்வந்திருப்பதை வரவேற்கிறோம். ஆனால் எந்த அடிப்படையில் பேச்சு நடத்துவது? அதற்கான நிபந்தனைகள், கால எல்லை தொடர்பாக ஒரு முன்னேற்பாடு வேண்டும்"

– அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

"மத்தியஸ்த உதவியை செய்ய விரும்பும் நாடுகள் அதனை இரகசியமாக செய்யலாம்"

–அமைச்சர் கதிர்காமர்

"இந்தியாவை புறக்கணிக்க முடியாது, இந்தியாவின் அனுசரணையுடனேயே மத்தியஸ்தம் இருக்க வேண்டும்"

– தமிழ்க் கட்சிகள்

"மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக அரசியல் கட்சிகளின் அபிப்பிராயத்தை அறியும் முயற்சியில் சுவிஸ் தூதுவர் செல்வி மரியா செய்சா கரோனி ஈடுபட்டிருக்கிறார்"

– பத்திரிகை செய்தி

"சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் கேட்டுக் கொண்டால் மத்தியஸ்தம் செய்ய தயார்"

– பிரிட்டன்

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதன் சாத்தியங்கள் எப்படி இருக்கின்றன என்பதற்கு அண்மையில் புலிகளால் நடாத்தப்பட்ட புலுக்குனாவ சம்பவங்கள் எடுத்துக் காட்டாக இருக்கின்றன. இந்த யுத்தத்தில் அரசோ புலிகளோ வென்றுவிட முடியாது என்பதையே புலுக்குனாவ சம்பவம் புலப்படுத்துகின்றது.

அரசு யாழ்ப்பாணத்தையும், கிளிநொச்சியையும் கைப்பற்றியிருக்கிறது. புலிகள் 1500பேர் கொண்ட முல்லைத்தீவு முகாமையும், சுமார் 150 பேர் கொண்ட விசேட அதிரடிப்படை முகாமையும் தாக்கியழித்துள்ளனர்.

யாழ்ப்பாண யுத்தமும், கிளிநொச்சி யுத்தமும் புலிகளுக்கு ஆட்திரட்டல் நிதி சேகரித்தல் ஆகிய இரண்டு விடயங்களிலும் பலத்த பின்னடைவை ஏற்படுத்தியிருந்தாலும், கெரில்லாப் போர் முனையில் புலிகளின் திறன் அப்படியே தக்க வைக்கப்பட்டிருப்பதை முல்லைத்தீவும், புலுக்குனாவையும் காட்டுகின்றன.

அரசுக்கோ, புதிதாகக் கைப்பற்றிய யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும், கிழக்கில் புலிகளின் கை ஓங்காமல் தடுப்பதற்கும் புதிதாக படைக்கு ஆட்களைச் சேர்க்க வேண்டிய நிலை. தப்பி ஓடியவர்களை எலிவேட்டை நடத்திப் பிடிக்க வேண்டிய நிலை. புதிதாக ஆட்கள் சேருவதற்கும் தயக்கம். இத்தகைய சூழ் நிலையில் கட்டாயமாக படைக்கு ஆட்களைத் திரட்டுவது பற்றியும் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே பாராளுமன்றத்தினுள்ளும் வெளியிலும் இனப்பிரச்சினை தீர்வுக்கென மூன்றாவது சக்தியொன்றின் மத்தியஸ்தம்பற்றிய பேச்சு பரவலாக அடிபடுகிறது.

வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவாதத்தின் போது அமைச்சர் கதிர்காமர் மத்தியஸ்தத்தைச் செய்ய விரும்பும் நாடுகள் இரகசியமாக அதனைச்செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

சுவிற்சலாந்து, இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகள் மத்தியஸ்தத்திற்கு தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளன. இந்தியாவின் மத்தியஸ்தம் பற்றி பலரும் பிரஸ்தாபிக்கின்றனர். முதலில் ஒரு விடயத்தில் இலங்கையின் சகல அரசியல் சக்திகளும் தெளிவான நிலைப்பாட்டிற்கு வரவேண்டும். இனப் பிரச்சினை தீர்வில் அக்கறை கொண்ட மூன்றாவது சக்தியின் மத்தியஸ்தம் அவசியம் என்பதே அது.

யாழ்குடாநாட்டைப் பொறுத்த வரையில், சில கிராமங்களில் முழு மக்கள் கூட்டமே வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். இருக்கக் கூடிய ஒரு சிலரும் கூட எப்படியாவது வெளிநாடுகளுக்குச் சென்றுவிட கொழும்புக்கு வந்தவண்ணமே உள்ளனர்.

போராட்டத்தில் ஏற்பட்ட சீரழிவுகள், தொடரும் யுத்தம் எல்லாம் மக்களை தமது சொந்த மண்ணை விட்டு துரத்துவதாகவே உள்ளது. அது மாத்திரமல்ல, ஏற்கனவே கல்வி தொடக்கம் சுகாதாரம் வரை யாவுமே சீரழிந்த வண்ணமே உள்ளன. ஒரு தலைமுறையின் வாழ்க்கையே சீரழிந்து விட்டது. மேலும் மேலும் மக்களை இழந்து கொண்டிருப்பதும்,மக்கள் வெளியேபோய்க் கொண்டிருக்க காரணமாக இருப்பதும் புத்திசாலித்தனமானதல்ல.

வெறுமனே சிலதாக்குதல்களில் வெல்வதை வைத்து, நாம் இராணுவ ரீதியில் வல்லமை உள்ளவர்களாக உள்ளோம் என்பதை விடுத்து, எமது மக்களைக் காப்பாற்ற வேண்டியது உடனடிக் கடமையாகும். எனவே தமிழீழ விடுதலைப் புலிகளும் கூட தொடரும் யுத்தம் எவ்வளவு தூரம் தேவையானது, பிரயோசனமானது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இன்றையநிலையில், அரசு, புலிகள், தமிழ்க்கட்சிகள், எதிர்க்கட்சிகள் யாவுமே கொள்கை ரீதியில் 3ம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள சூழ்நிலையில், நடைமுறையில் இம் மத்தியஸ்தத்தை கொண்டுவருவதே இன்றைய அவசரத் தேவையாகும். சர்வதேச சமூகத்திடம் நல்ல பெயர் வாங்குவதை நோக்கமாகக் கொண்டு 'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்குத் தயார்' என அறிக்கைகள் விடுவதை விடுத்து, நடைமுறையில் இதனைச் சாதிக்க அனைத்து சக்திகளும் முயற்சிக்க வேண்டும். ●



வாசகர்களுக்கு,
நத்தார், புதுவருட
வாழ்த்துக்கள்!

www.padippakam.com



## வவுனியா அகதிகள்

வவுனியாவில் தங்கியிருக்கும் அகதிகள் தொடர்பாக சகல தமிழ் கட்சிகளும் குரல் கொடுத்தும் கூட இதுவரை எதுவித மாற்றமும் நடக்கவில்லை.

வவுனியாவிற்கு பாரியளவில் அகதிகள் வந்தவுடன் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் தனது குழுவினருடன் அங்கிருக்கக்கூடிய அகதி முகாம்களுக்கு விஜயம் செய்து, அங்குள்ள சூழ்நிலைகள் தொடர்பாக ஜனாதிபதி அவர்கட்கு நீண்ட கடிதத்தை எழுதினார். மக்களின் துன்பங்கள், அவர்களின் தேவைகள், அங்கிருக்கக்கூடிய நிலைமைகள் தொடர்பாக அவரது கடிதத்தில் விபரிக்கப்பட்டிருந்தது.

ஹிட்லரின் நாஸி வதை முகாம்களைப் போல் இது காட்சியளிப்பதாகவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் திரு. பிரேமச்சந்திரன் குறிப்பிட்டிருந்தார். இது இலங்கை, இந்தியப் பத்திரிகைகளிலும் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கண்விழித்து அறிக்கைகள் விடுத்ததுடன், பாராளுமன்றத்திலும் இதனை விவாதத்துக்கெடுத்தது. இதேசமயம், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், போன்ற கட்சிகள் வவுனியாவில் இது தொடர்பாக ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்களையும் நடாத்தின.

ஆனால் இன்றுவரை நிலைமையில் எந்தவித மாற்றமும் இல்லை. கிளிநொச்சி, யாழ்ப்பாணம் அகதிகளையும், தனித் தனியாக இருந்த குடும்ப அங்கத்தவர்களையும் ஒன்றாக்கியதை தவிர இந்த அரசாங்கம் வேறு எதுவுமே செய்யவில்லை.

கடந்த இரண்டு மாதங்களில் சிறுவர்களும் முதியோர்களுமாக 11 பேர் இவ் அகதி முகாமில் அநியாயமாக இறந்துள்ளனர். சரியான மருத்துவ வசதிகள் கிடைத்திருந்தால் இவர்களைக் காப்பாற்றி இருக்க முடியும். ஆனால் அரசின் ஏனோ தானோ நடவடிக்கைகளை யாரும் கண்டுகொள்வதாக இல்லை. அரசின் இம்மோசமான நடவடிக்கைகளை கண்டிப்பதற்குக் கூட வக்கற்ற நிலையிலேயே தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள்.

மிகவும் நோய்வாய்ப்பட்ட நிலையில் அகதி முகாமில் இருந்து கொழும்புக்கு முதியவர்கள் அனுப்பப்படுகின்றனர். ஆனால் அப்படியானோரை பராமரிக்க அரசு அவர்களின் பிள்ளைகளுக்கு அனுமதியளிப்பதில்லை. பிள்ளைகள்–அகதி முகாம்களில், நோய்வாய்ப்பட்டோர்–கண்காணாத இடங்களில் வைத்தியசாலைகளில். அவர்கள் இறந்தாலும் யாருக்கும் தெரியாது என்ற சூழ்நிலையே நிலவுகின்றது. இது மாத்திரமல்லாமல் கர்ப்பிணிப் பெண்கள் கூட மாதாந்தம் டாக்டர்களைப் பார்த்து தமது உடல்நிலையைப் பரிசோதிக்க முடியாத நிலைமையே இன்னும் உள்ளது. இதனால் அநியாயமான சாவுகள்தான் ஏற்படுகின்றது என்பதை அரசாங்கம் இன்னும் புரிந்துகொள்வதாய் இல்லை.

பாராளுமன்றத்தில் பேசி அது பத்திரிகைகளில் வந்ததும் தமது வேலை முடிந்துவிட்டதாகவே பாராளுமன்ற உறுப்பினர்களும் கருதுகின்றார்கள். இதற்கு முழுமையான தீர்வொன்றைக் காண இவர்கள் எவ்வித முயற்சிகளும் மேற்கொள்வதாக இல்லை. வெறும் பிரச்சாரத்தை நோக்கமாகக் கொண்டே இவர்களது செயல்முறைகள் அமைகின்றன. அரசுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இவை தொடர்பாக நிரந்தரமான தீர்வுகள் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

என்னிடமிருந்து
எல்லா சமுத்திரங்களையும்
எல்லா இடங்களையும்
பறித்துக் கொண்டீர்கள்
இப்பூமியில் என்
காலணி அளவுக்கே
இடம் விட்டு வைத்தீர்கள்
அதைச் சுற்றிலும்
கம்பிகள் நட்டீர்கள்
இவற்றாலெல்லாம் நீங்கள்
சாதித்தது என்ன?
ஒன்றுமில்லை
எனதுஉதடுகளை
விட்டு வைத்தீர்கள்
அவை மௌனத்திலும்
வார்த்தைகளை வடிக்கின்றன.

– மாண்டெல்ஷ்டாம் –

# மீன்கள் இப்பொழுது பாடுவ-தில்லை....

> கிழக்கு மாகாணத் தலைநகர் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், வழமை நிலையில் இருப்பதாகவும் அரசு உரிமை கொண்டாடுகின்றது. ஆனால் அப்படி இல்லை என்பதற்கு நிறையவே சாட்சிகள் இருக்கின்றன. புலிகள் இப்பொழுதும் ஊடுருவக்கூடிய மாதிரியும் எந்தத் தாக்குதலையும் நடாத்தக் கூடிய மாதிரியுமே உள்ளார்கள். நாங்கள் இரண்டு அரசுகளால் ஆளப்படுகின்றோம் என்பதிலும் விட இரண்டு சக்திகளால் நாங்கள் நெருக்கப்படுகின்றோம் என மக்கள் கூறுகின்றார்கள். ஆனால் வாழ்க்கை ஏதோ போய்க் கொண்டிருக்கிறது.

மட்டக்களப்புக்கு பொலநறுவையூடாக பிரயாணம் செய்யும்பொழுது, வெலிக்கந்தைக்கு அப்பால் அது ஓர் யுத்த பூமியாகவே காட்சியளிக்கின்றது. இதன் பொருள் கொழும்பு யுத்தத்தால் பாதிப்படையவில்லை என்பதல்ல. ஆனால் வெலிக்கந்தைக்கு அப்பால் செல்லும்பொழுது இது ஓர் யுத்த பூமி என்பதை நாம் உணரமுடியும்.

இந்த உணர்வானது காற்றிலேயே கலந்துள்ளது. சீருடையில் இராணுவ வீரர்கள், உள்ளூரில் கிடைக்கக் கூடிய தென்னங்குற்றிகளால் உருவாக்கப்பட்ட காவல் அரண்கள், சோதனைச் சாவடிகள், மறிப்புக்கள், ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் நீண்டவரிசையில் மக்கள், உடற் சோதனைகள், இராணுவ கவச வாகனங்களைக் கொண்ட நீண்ட வாகனத் தொடர்கள், இவை யாவும் யுத்த பூமி என்பதை உணர்த்தி நிற்கின்றன.

ஆனால் மட்டக்களப்பில் வாழ்க்கை இன்னும் வழமை நிலையில். இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் நிறையவே புலிகள் இருப்பதாக சோதனைச் சாவடிகளில் இருக்கும் இராணுவச் சிப்பாய்கள் கூறுகின்றனர். இவர்கள் புலிகளின் 'பிஸ்டல் குழு'வைச் சேர்ந்தவர்கள் என அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த வாரம் புலிகள், ரெலோ உறுப்பினர் ஒருவரையும், ஓர் பொலீஸ் அதிகாரியையும் சுட்டுக் கொன்றுள்ளனர். இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்றவை இயங்கி வருகின்றன. இதில் சில இயக்கங்கள் புலிகளின் ஊடுருவல்களை இராணுவத்துக்குக் காட்டிக் கொடுப்பதில் உதவி வருகின்றன. இவர்களது நடவடிக்கைகளும், இவர்களது போக்குவரத்துகளும் மட்டுப்படுத்தப்பட்டே உள்ளது.

ஆனால் உள்ளூர் மக்களைப் பொறுத்தவரை இவர்கள் தொடர்பாக நல்ல கருத்துக்கள் இல்லை. இவர்கள் வெறுமனே கதிரைக்குப் பாரமாக இருப்பதாக பெயர் வெளியிட விரும்பாத தொண்டர் நிறுவன உறுப்பினர் ஒருவர் கூறினார்.

தொண்டர் நிறுவன உத்தியோகத்தர்களும் அங்கும் இங்குமாக கார்களிலும் பஜிரோக்களிலும் ஓடித் திரிவதுடன், பாதிக்கப்பட்ட உள்ளூர் குடிமக்களுக்கும் உதவுகின்றார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் அங்கு பிரசன்னமாயிருக்கின்றது. தன்னுடைய அன்றாட நடவடிக்கைகளை விட புனருத்தாரண வேலைகளிலும் இது ஈடுபடுகின்றது. இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் வலைகளை இழந்த மீனவர்களுக்கு இது வலைகளை விநியோகிக்கின்றது. உள்ளூர் குடிமக்களும் இவர்களது உதவிகளுக்காக இவர்களுக்கு மதிப்பளிக்கின்றனர்.

எம்.எஸ்.எஃப். (மெடிசின் சன்ஸ் ஃப்ரண்டியேர்ஸ்) என்ற அமைப்பினர் புலிகளின் பகுதிகளில் மருத்துவ கிளினிக்குகளை நடாத்துகின்றனர். அத்துடன் அங்கு வரக்கூடிய தோற்றுநோய்களுக்கும் மருந்து கொடுக்கின்றனர்.

இவர்களது வேலைக்கப்பால், இத் தொண்டர் நிறுவனங்கள் மக்களின் மிக மோசமான விமர்சனத்துக்குள்ளாகியுள்ளன.

இங்கு தொண்டர் நிறுவனங்கள் என்ன செய்கின்றன? திட்டங்களை உருவாக்குகின்றன. திட்டங்கள் மட்டுமே. அத்துடன் சரி, அதனை அவர்கள் அமுல்படுத்துவதில்லை. தொடர்ந்து நடாத்துவதும் இல்லை. தமது திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறதா என்பதையும் அவர்கள் அவதானிப்பதில்லை. அவர்கள் பயிற்சி மாத்திரம் வழங்குகின்றார்கள்–'பயிற்சி மட்டுமே!'.

கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் கூறுகின்றார். "என்னுடைய மாணவி ஒருவர் இரண்டு நாட்களாக விரிவுரைகளுக்கு வரவில்லை. ஏனெனில் தொண்டர் நிறுவனமொன்று பூச்சாடிகளைச் செய்வதற்கான பயிற்சி வகுப்புக்களை இரண்டு நாட்கள் நடாத்தியதால் அவர் அதற்குப் போயிருந்தார். அவர் பல்கலைக்கழகத்துக்கு வந்தபோது, 'பூச்சாடி செய்வதன் மூலம் வருமானத்தை உருவாக்க நீங்கள் உண்மையாகவே முயற்சிக்கப் போகின்றீர்களா?' எனக் கேட்டபோது, அவர் சர்வசாதாரணமாகவே 'அப்படி எதுவுமில்லை'எனக் கூறினார். அப்படியானால் ஏன் அந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டார்?

ஏனென்றால், அவர் சொல்கின்றார்: "என்னுடைய சகோதரியின் நண்பரின் சகோதரன் ஒருவர் இப்பயிற்சி முகாமை ஒழுங்கு செய்திருந்தார். அதற்குத் தேவையான அளவு ஆட்களைத் திரட்ட முடியாததால் என்னையும் பங்குபற்றுமாறு கேட்டனர், அதனால் நானும் கலந்துகொண்டேன்" எனக் கூறினார். இப்படியான முட்டாள்தனங்களும் நடைபெறுகின்றன.

வாழ்க்கையும் அப்படியே.

தொண்டர் ஊழியர்களின் வாழ்க்கை மிகவும் ஆடம்பரமானதும், சுகபோககரமானதுமாகும். அவர்கள் ஆடம்பரமான வாகனங்களில் சுற்றுவதுடன் ஹோட்டல்களிலேயே அவர்களது வாழ்க்கையும் நடப்பதாக ஹோட்டல் ஊழியர் ஒருவர் கூறினார்.

ஆனால் தொண்டர் நிறுவனத்தினர் தமது குறிக்கோளை நோக்கி வேலை செய்வதாகக் கூறுகின்றார்கள். (செய்தாலும் பிரச்சினை செய்யாவிட்டாலும் பிரச்சினை, ஆகவே நாங்கள் எமது கடமைகளைச் செய்கின்றோம் என அவர்களில் ஒருவர் கூறினார்.

அப்படியேதான் மட்டக்களப்பு வாழ்க்கையும் போகின்றது.

சாந்தி 18 (உண்மைப் பெயரல்ல) பாடசாலை செல்லும் ஒரு மாணவி. புலிகளில் இணைவது பற்றி அவர் தீவிரமாக ஆலோசிக்கின்றார். இவரது தந்தை இவரை ஒரு இராணுவ சிப்பாய்க்கு திருமணம் செய்து முடித்து வைக்க யோசிக்கின்றார். ஏனெனில் இவரைத் திருமணம் முடித்து வைக்காவிட்டால் இவர்கள் கொலை செய்யப்படுவார்களென கடந்த இரண்டு மாதமாக அந்த இராணுவச் சிப்பாயால் மிரட்டப்பட்டு வருகின்றார்.

பயத்தின் காரணமாக தந்தையார் எங்கும் இதைப்பற்றி முறைப்பாடு செய்யவில்லை. இராணுவத்தால் கடத்தப்படக்கூடும் என்ற அச்சத்தால் இவர் பாடசாலைக்கும் போவதில்லை. பலாத்காரமாக இராணுவச் சிப்பாயை திருமணம் முடிப்பதிலும் விட புலிகள் இயக்கத்தில்இணைந்து சாவது மேலென இவர் நினைக்கின்றார்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

புதிய கண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1, மட்டக்களப்பு. ☎ 065-2398

54, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. ☎ 026-22858

22, வெளிவட்ட வீதி, வவுனியா. ☎ 024-22070

மன்னார். ☎ 023-2370

Post Bag: 1041, Madras-17. India.

B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K.

E.P.I.C., Box No: 95, 95144, GargesLes, Gonnesse Cedex, France.

P.Fach: 100206, 44002 Dortmund, Germany.

P.Fach: 506, Bern-17, Switzerland.


படிப்பகம்

www.padippakam.com





## ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல்

# அரசின் நோக்கமென்ன?

தீர்வுத்திட்ட யோசனைகள் ஈனஸ்வரத்தில் ஒலித்துக் கொண்டிருக்க, யுத்த சன்னத கோலம் அப்படியே இருக்க, தமது உறவினர்கள் நண்பர்களிடம் தஞ்சமடைய வந்தவர்கள் அகதிகள் என்ற பெயரில் அடைத்து வைக்கப்பட்டிருக்க, யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டவர்களின் கதி என்னவென்ற மர்மம் நீடித்திருக்க, மாணவிகள் பாடசாலைக்குச் செல்வதே திகிலூட்டும் விடயமாக மாறியிருக்கின்ற சூழ்நிலையில் அரசு அதிரடி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டது. அதுதான் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதென்ற செய்தி.

யுத்தத்தில்அகதிகளான மக்கள் இன்னும் உட்காரக்கூட இல்லை. அதற்குள் தேர்தலை அறிவிக்கும் அவசரம் அரசுக்கு நேர்ந்துள்ளது.

தேர்தல் நடத்துவதற்குரிய சூழ்நிலை நிலவும் தென்பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்த கால நேரம் சரியில்லை; நாள் நட்சத்திரம் சரியில்லை என்று சால்ஜாப்புகள் சொல்லும் அரசு, யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்துவதில் காட்டும் அக்கறை, நியாயமாகச் சிந்திக்கும் எவருடைய மனதிலும் பலத்த சந்தேகங்களை உருவாக்கும்.

அரசின் இந்த அறிவிப்பு 1993 இல் ஐ.தே.க. அரசின் உள்ளூராட்சித் தேர்தல்அறிவிப்பை அடியொற்றியதாகவே அமைகிறது. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பொதுஜன முன்னணி இந்த உள்ளூராட்சித் தேர்தலை ஆட்சேபித்தது என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது.

கிராமிய பிரதேச மட்டத்தில் ஜனநாயகத்தை மலர்விப்பது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது என்று அப்போது ஐ.தே.க. அரசினால் இனிப்புத் தடவிய வார்த்தைகள் கூறப்பட்டன. இன்று பொதுஜனமுன்னணிஅரசும் அதே வார்த்தைகளைத்தான் கூறக்கூடும்.

1990இல் சகல தார்மீக நெறிமுறைகள், சட்ட சம்பிரதாயங்களுக்கு முரணாகக் கலைக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபை பற்றி அரசு தரப்பில் யாரும் மறந்தும் கூட மூச்சு விடுவதில்லை.

ஆனால், யாழ்ப்பாணத்திற்கு உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை நடாத்துவதில் மாத்திரம் அதீத கரிசனை காட்டப்படுகிறது. அதுவும் எந்தத் தமிழ் அரசியல் கட்சிகளும் யாழ்ப்பாணத்தில் செயற்படாத நிலையில் தேர்தல் அறிவிப்பு வந்துள்ளது.

மனித உரிமைகள் பாதுகாப்புக் குழு(HRTF) கூட, பலரும் கூக்குரல் இட்ட பின்னர் மிக அண்மையில் தான் அங்கு உருவாக்கப்பட்டுள்ளது. அதுவும் பலமான இழுத்தல் பறித்தலுக்குப் பின்னர்தான்.

அப்படியானால் உள்ளூராட்சித் தேர்தல் நடாத்துவதில் மாத்திரம் அவசரப்படுவதில் என்ன காரணம் இருக்க முடியும்?

ஓரளவுக்கு அரசியல் கட்சிகளின் செயற்பாடு நிலவிக் கொண்டிருந்த காலத்திலேயே, 1993இல் கிழக்கில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல் மாபெரும் கேலிக்கூத்து நாடகமாகவே நடத்தப்பட்டது. மிகப் பெரிய தேர்தல் மோசடிகள் நடைபெற்றன. இதில் அதிரடிப்படையும் இராணுவமும் பொலிசும் வகித்த அவமானகரமான பாத்திரம் யாரும் அறியாததல்ல.

அரசில் அங்கம் வகிக்கும் பல அரசியல் கட்சிகள் (குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ்) மிரட்டப்பட்ட சம்பவங்கள், திருட்டு வாக்குகள் அள்ளி அள்ளிப் போட்ட சம்பவங்கள் ஏராளமாக நடைபெற்றன. இராணுவத்தினால் உருவாக்கப்பட்ட சுயேட்சைக் குழுக்கள் தேர்தலில் நிற்கும் காட்சிகள் அம்பாறை மாவட்டத்தில் நிகழ்ந்தன.

மேற்கண்ட விடயங்கள் தொடர்பாக பொதுஜன முன்னணி அரசு விசாரணைக் கமிஷன் அமைத்து விசாரணைகள் தொடர்ந்துகொண்டிருப்பதும் இங்கு நினைவுகூரப்பட வேண்டிய விடயம்.

யாழ்ப்பாணத்தில் எந்தச் சிவில் அரசியல் அமைப்புக்களும் முழுமையாகச் செயற்பட முடியாத நிலையில் முற்றுமுழுதான ஒரு இராணுவமயப்பட்ட சூழ்நிலையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நீதியான முறையில் நடக்கும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

பரவலாக புலிகளின் தாக்குதல்களும், அரச படையினரின் அத்துமீறல்களும் அதிகரித்துள்ள சூழ்நிலையில், அவைபற்றி அரசாகவே முன்வந்து வெளிப்படுத்தாத அல்லது மௌனம் சாதிக்கும் சூழ்நிலை நிலவுகையில், உள்ளூராட்சித் தேர்தல்கள் எந்த லட்சணத்தில் நடத்தப்படும் என நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தீர்வுத்திட்டயோசனைகள், நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும் என்ற வகையில் பந்தாடவிடப்பட்ட சூழ்நிலையில் உள்ளூராட்சி தேர்தலுக்கானஅறிவித்தல்மாத்திரம் மின்னாமல் முழங்காமல் வந்துள்ளது.

அதாவது பொதுஜன முன்னணி அரசின் நிகழ்ச்சி நிரலில் இராணுவ வெற்றியே முதன்மைப்படுத்தப்பட்ட விடயமாக இருக்கிறது.

அதற்கு பலம் சேர்க்கவேண்டிய தேவை இருக்கிறது. யாழ் குடாநாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், அங்கு மக்கள் படும் நாளாந்த அவதிகள், சர்வதேச சமூகத்தின் மத்தியில் பல ஐயப்பாடுகளை உருவாக்கி உள்ளது. அங்கு




இயல்பு வாழ்க்கை ஒன்று நடைபெறுவதாக உலகுக்குக் காட்ட வேண்டிய தேவை அரசிற்கிருக்கிறது. இதுவே அரசின் மூலோபாயமும் ஆகும்.

1993இல் ஐ.தே.க.வினால் கிழக்கில் நடாத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்களும் இதே நோக்கங்களுக்காகவே நடாத்தப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் இராணுவவாத ஜனநாயக விரோத நடவடிக்கைகளை விமர்சித்த பொதுஜன முன்னணி, தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த முனைவது அவர்கள் விட்ட பணியை இவர்கள் தொடர்வதாகத்தான் கருதமுடியும்.

இங்கு அடிப்படையான கோளாறு எதுவென்றால், பேரினவாத நோக்குநிலையே. தீர்வு, சமாதானம் எல்லாவற்றையும் விட இந்த யுத்தத்தில் வென்று விடுவது. அதனால் தான் ஏற்கனவே யுத்தத்திற்கு 'சமாதானத்திற்கான யுத்தம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

அரசியல் தீர்வைவிட இராணுவத் தீர்வில் உள்ள முனைப்பும் அவசரமும்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்ற அரசின் யோசனைக்குக் காரணமாக அமைந்துள்ளது.

அரசியல் கட்சிகள் எதுவும் அங்கு செயற்படாத நிலையில், அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட யாழ் மக்கள் புற நெருக்குதல் இல்லாமல் இத் தேர்தலில் வாக்களிப்பது சாத்தியமில்லை.

அவர்கள் எத்தகைய எதிர்பார்ப்புகளுடன் யாழ்ப்பாணத்தினுள் திரும்பிச் சென்றார்களோ அவையெல்லாம் வெறும் கானல்நீராகிவிட்ட சூழ்நிலையில், மூடுண்ட அடைபட்ட ஊரில் வாழ்பவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வுக்கும் சமாதான சூழ்நிலைக்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கையில், அவர்களை வைத்து பகடையாடும் அரசின் செயற்பாட்டையிட்டு அவர்கள் விரக்தியின் எல்லைக்கு செல்லும் சாத்தியங்களே உண்டு.

அரச இராணுவத்தின் கெடுபிடியொருபுறம் புலிகளின் நெருக்குதல்கள் அச்சுறுத்தல்கள் மறுபுறம் பலியாடுகளாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் யாழ்நகரை இயல்பு நிலைக்கு கொண்டுவர வேண்டுமென்ற இதய சுத்தியான நோக்கம் அரசுக்கு இருக்குமேயானால், முதலில் இயல்பு நிலைக்கான அடிப்படைகள் உருவாக்கப்பட வேண்டும். சிவில் நிர்வாக அமைப்பு, தனது அதிகாரங்களை முழுதாகப் பிரயோகிப்பதற்கும் அரசியல் கட்சிகள் மனித உரிமை அமைப்புக்கள் பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கும் சர்வதேச அவதானிப்பாளர்கள் அங்கு வந்து செல்வதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும். ஒரு உருப்படியான அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.

எதுவும் நிச்சயமற்ற நிலையில் (உயிர் உட்பட), உள்ளூராட்சி தேர்தல்கள் என்பது மக்களுக்கு எரிச்சலூட்டுவதாகவே அமையும்.

யாழ்ப்பாண நிலவரம் பற்றி ரூபவாகினி சொல்வதையே வெளியில் வாழ்பவர்கள் கேட்கவேண்டிய நிலை. கடிதங்கள் மூலமாகவோ அல்லது அங்கிருந்து வருபவர்களூடாகவோ கிடைக்கும் தகவல்கள் கசப்பானஉண்மைகளாகவே இருக்கின்றன.

நியாய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதே சிரமமான காரியமாக இருக்கிறது. புனரமைப்பென்பது நினைத்துப் பார்க்கமுடியாத விடயமாக இருக்கிறது.

முற்றுமுழுதாக இராணுவமயப்பட்ட சூழ்நிலையில், அரசியல் கட்சிகளே செயற்படாத, செயற்படுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படாத நிலையில், மனித உரிமைகள் கேட்பாரின்றி மீறப்படும் நிலையில், இத்தேர்தல் ஒரு ஏமாற்று நாடகமாகவே அமைந்து விடும்.

ஒரு பாரதூரமான தவறு திரும்பத் திரும்ப இழைக்கப்படும்போது அதுவே நியதியாகிவிடுகிறது. யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலும் இப்போது நடக்குமானால், அந்த நியதிகளுக்கே உட்படும். இந்த நியதிகள் மீறப்பட வேண்டுமென்பதே இங்கு முக்கியமான பிரச்சினை.

-எஸ். திருநாவுக்கரசு

# தோழர் பத்மநாபா

தமிழீழ விடுதலைப் புலிகளால் 1990 ஆனி 19 ல் படுகொலை செய்யப்பட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா அவர்களது 45வது பிறந்த தினம் கார்த்திகை 19 அன்றாகும். அமரர் பத்மநாபா அவர்களின் பிறந்த நாள் நினைவுதின வைபவம் சென்னையில் உள்ள புழல் அகதிகள் முகாமில், 19ந் திகதி காலை அஞ்சலி நிகழ்ச்சியுடன் ஆரம்பமானது.




தமிழ் நாட்டில் அகதி முகாம்களிலும், பல்வேறு இடங்களிலும் உள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள், ஆதரவாளர்களும், தோழர் பத்மநாபாவை- அவர்தம் கொள்கைகளை நேசிப்பவர்களும் பெருமளவில் வந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கும்மிடிப்பூண்டி, பானாவரம், முட்டுக்காடு, கோவளம் ஆகிய இடங்களிலுள்ள அகதி முகாம்களிலிருந்து வந்த பலர் விளையாட்டுப் போட்டிகளிலும் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர்.

விளையாட்டு நிகழ்ச்சிகளின் இறுதிப் போட்டிகள் 19ஆம் திகதி நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் தோழர் பத்மநாபா நினைவுக் கேடயங்களும் வழங்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com





# இனியும் தமிழ் மக்களே!...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின், மாவீரர் தினச் செய்தி, விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு தெம்பூட்டுவதாக இருந்தாலும், முழுத் தமிழ் மக்களுக்கும் சோகத்தையும் நம்பிக்கையீனங்களையுமே அளித்துள்ளது.

'நாம் சமாதானத்தின் விரோதிகளல்ல; ஆனால் உண்மையான சமாதானத்திற்காக நிற்கின்றோம்' எனக் கூறியபோதும், இறுதியில் போருக்கான பிரகடனத்துடனேயே அவரது செய்தி முடிவடைகின்றது.

மீண்டும் மீண்டும் தனது இலட்சியத்தையும், அதன் மேல் உள்ள உறுதிப்பாட்டையும் வலியுறுத்தும் அவர், அந்த இலட்சியத்தின் மேல் உள்ள உறுதிப்பாட்டாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னும் நிலைகுலையாமல் உள்ளது என்பதையும் வலியுறுத்தி உள்ளார்.

'ஏனைய தமிழ்க் குழுக்களின் இலட்சியக் கோட்டைகள் தகர்ந்து போய்உள்ளன. உலக வல்லரசான இந்தியாவின் இராணுவ மேலாதிக்கம்கூட எமது உறுதியை உடைத்து விடமுடியவில்லை' என்று கூறுகின்றார். அதேசமயம் எல்லோரிடம் இருந்தும் தனிமைப்பட்டுவிட்டதாகவும் அவர் அங்கலாய்க்கின்றார்.

பிரபாகரனின் கடந்தகால வரலாற்றை மிகச் சுருக்கமாகத் திரும்பிப் பார்த்தால், தமிழ் மக்களின் போராட்டத்துக்கு அவர் எவ்வளவு தூரம் பாரதூரமான பின்விளைவுகளை உருவாக்கினார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

முதலாவதாக, தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் என்பதிலும் விட புலிகளை நிலைநிறுத்துவதற்கான போராட்டமாகவே இதுவரை யுத்தத்தை இவர் நடாத்தி வருகின்றார். வடகிழக்கில் புலிகளைத் தவிர வேறு எந்த இயக்கங்களும் இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலேயே அவரது ஆரம்பகாலச் செயற்பாடுகள் இருந்தன. இன்றும் அது அவ்வாறே இருந்து வருகின்றது.

இதனால் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஏனைய தமிழ் இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, புளொட் போன்ற இயக்கங்களை அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதன் மூலம் நூற்றுக்கணக்கான தமிழ்ப் போராளிகளைக் கொன்றொழித்ததுடன், ஆயிரக்கணக்கான போராளிகளும் அவர்களது ஆதரவு சக்திகளும் நாட்டை விட்டு வெளியேறக் காரணமாக இருந்தார்.

ஆனால் இவரால் இயக்கத் தலைமைகளையும், அதன் உறுப்பினர்களையும் ஓரளவுக்கு அழிக்க முடிந்ததே தவிர இயக்கங்களை முழுமையாக இல்லாதொழிக்க முடியவில்லை.

ஏனைய இயக்கங்களை முடக்கி, தான் தனித்து நின்று தமிழீழத்தை எடுப்பேன் என்று மார்தட்டியவரால், 1987இல் நடைபெற்ற சிறீலங்கா அரசின் 'ஒப்பரேசன் லிபரேசனை' தாக்குப்பிடிக்க முடியவில்லை. இவர்கள் யாழ் குடாநாட்டையும் இழந்து போனால் பேரம் பேச முடியாமல் போய்விடும் என்பதாலேயே இந்தியா உடனடியாகத் தலையிட்டு, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கியது.

இலங்கை அரசின் ஒப்புதலுடன் இவ்வொப்பந்தம் உருவாக்கப்பட்டதென்பதிலும் விட, இலங்கை மீது இவ்வொப்பந்தம் திணிக்கப்பட்டதென்பதே உண்மை.

இன்னொரு வழியில் குறிப்பிடுவதாயின், ஏனைய இயக்கங்கள் புலிகளால் அழிக்கப்பட்டு முடக்கப்பட்ட சூழ்நிலையில், தனித்து நின்ற புலிகளை அடக்க முடியுமென்றே சிறீலங்கா இராணுவம் 'ஒப்பரேசன் லிபரேசனை' நடத்தியது. இதில் வடமராட்சியின் பெரும் பகுதியையும் சிறிலங்கா இராணுவம் கைப்பற்றியது.

புலிகளின் பலவீனமான நிலையைப் புரிந்து கொண்ட இந்திய அரசு இச் சந்தர்ப்பம் தவறவிடப்பட்டால், தமிழ் மக்களுக்கு அற்ப சொற்ப உரிமைகளும் கிட்டாது என்பதாலேயே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கினர்.

அதை இன்னொரு வகையில் கூறுவதாயின், புலிகள் ஏனைய இயக்கங்களை அழித்து தானும் பலவீனப்பட்டு சிறிலங்கா இராணுவத்தை எதிர்கொள்ள முடியாத சூழ்நிலையில், தமிழ் மக்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தவே இங்கு இந்திய இராணுவம் வரவேண்டி ஏற்பட்டது.

மறுபுறத்தில் சிறீலங்காவின் ஏகாதிபத்திய தொடர்புகள், இலங்கை மண் ஏகாதிபத்தியவாதிகளின் தேவைகளுக்காக உபயோகப்படுத்தும் முயற்சி, இதனால் இந்தியாவிற்கு ஏற்படக்கூடிய பாதுகாப்பு தொடர்பான அச்சம் இவை யாவும் கூட இந்திய இராணுவம் இங்கு வரக் காரணமாயிருந்தன.

சிறீலங்கா அரசுக்கு விருப்பமில்லாமலேயே ஓர் ஒப்பந்தம் திணிக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் பல குறைபாடுகள் இருந்தன. இருந்த பொழுதும் தமிழர் தரப்பின் பலவீனத்தை உணர்ந்து இதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் கட்சிகளுக்கு ஏற்பட்டது.

பிரபாகரனும் இதனை ஏற்றுக்கொண்டு ஜனநாயகப் பாதைக்கு வர சம்மதித்ததுடன், தனது இயக்க



எமது நியாயமான கோரிக்கைகளை மதிக்காவிடில் சர்வதேச ரீதியில் அந்நியப்படப்போவது சிறீலங்கா அரசே தவிர நாமல்ல. இந்நிலையில், மக்களின் அழிவைத் தடுத்து, கௌரவமான, நீதியான அரசியல் தீர்வொன்றைக் காண அனைவரும் முன்வர வேண்டும். போர்ப் பிரகடனமா அல்லது சமாதானப் பிரகடனமா? ஒரு தலைமுறையின் அழிவா அல்லது நீதியான தீர்வா? பிரபாகரன் முடிவு செய்ய வேண்டும்.

உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க இந்திய அரசிடம் 100கோடி ரூபாயையும் கேட்டிருந்தார். இவர் இந்தியாவை விட்டு வெளியேற முன்னரேயே, இவருக்கு 50 லட்சம் ரூபாவும் இதற்காகக் கொடுக்கப்பட்டது.

ஆனால் மீண்டும் இலங்கைக்கு வந்த பிரபாகரன் இந்திய இராணுவத்துடன் யுத்தத்தைத் தொடக்கினார். ஆனால் இந்திய இராணுவத்தை எதிர்கொள்ள முடியாமல் காடுகளில் முடங்க வேண்டி ஏற்பட்டது.

இந்திய ராணுவத்துடன் மோத முடியாத புலிகள், அவர்களை எதிர்ப்பதற்கும், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆல் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய இராணுவத்தை அழிப்பதற்கும் தமது எதிரியான பிரேமதாச அரசுடன் கூட்டுச் சேர்ந்தார்கள். நண்பனை அழிப்பதற்கு எதிரியுடன் கூட்டுச் சேர்ந்த துரோகத்தனத்தை பிரபாகரன் இங்கு ஏற்படுத்தினார்.

ஆனால் இந்தியாவில் ஏற்பட்ட ஜனநாயக மாற்றத்தால் வி.பி. சிங், இந்திய இராணுவத்தை திருப்பி அழைத்தார். அத்துடன் விடயங்கள் முடியவில்லை. எல்.ரி.ரி.ஈ.இற்கு எதிராகச் செயற்பட்டார் என்ற காரணத்திற்காக இந்தியாவின் இளைய பிரதமர் ராஜீவ்காந்தி புலிகளால் மிகவும் குரூரமாகக் கொலை செய்யப்பட்டார்.

பின்னர் எதிரியுடன் கொண்டிருந்த நட்புக் கசந்ததால் புலிகளால் பிரேமதாசாவும் கொலை செய்யப்பட்டார். இறுதியில் இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேசத் தொடங்கி, அதனையும் 3 மாதத்தில் முறித்துக்கொண்டு யுத்தப் பிரகடனம் செய்தார். இந்த யுத்தத்தில் யாழ் குடாநாட்டையும் இழந்து கிளிநொச்சியையும் இழந்த நிலையில், இன்றும் இறுதிவரை போராட்டம் என பிரகடனப்படுத்துகின்றார்.

இராணுவ ரீதியில் பல சாதனைகளை இவர் புரிந்தபோதும், தமிழ் மக்களின் போராட்டம் இவரால் சின்னாபின்னப்படுத்தப்பட்டதையே இது காட்டுகின்றது.

முதலாவதாக, தமிழ் இயக்கங்களிடம் இருந்து தனிமைப்பட்டார். ராஜிவ்காந்தியை கொலை செய்ததன் மூலம் இந்தியாவிடம் இருந்து அந்நியப்பட்டார். அத்துடன் ராஜீவ் காந்தி கொலையால் சர்வதேச ரீதியாக பயங்கரவாதி என்ற பட்டத்தையும் வாங்கிக்கொண்டார். இறுதியாக சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தையை முறித்ததன் மூலம் சர்வதேச சமூகத்திடம் இருந்தும் அந்நியப்பட்டார்.

இன்று, 'எமக்கு எந்த ஆதரவுமில்லை; எமக்கெதிராக பல சக்திகள் கூட்டமாகச் செயற்படுகின்றன. எமது பலத்திலும் விட பலமடங்கு பலம் கொண்ட சக்திகளுடன் நாம் மோதவேண்டியுள்ளது' என அங்கலாய்க்கின்றார். இந்நிலைமைக்கு பிரபாகரன் தான் காரணமே தவிர வேறு யாருமல்ல. யானை தன் தலையில் மண்ணை அள்ளிப் போடுவதுபோல், பிரபாகரன் தன் தலையில் மாத்திரமல்ல முழுத் தமிழ் மக்களின் தலையிலுமே மண்ணை அள்ளிக் கொட்டியுள்ளார்.

"இன்று யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. சிங்கள இனவாத அரசு இனச் சங்காரம் செய்கின்றது. யாழ்ப்பாணத்தில் மக்கள் செத்து மடிகின்றார்கள். யாழ்ப்பாணம் திறந்த வெளிச் சிறைச்சாலை போல் காட்சியளிக்கின்றது. சிங்கள பேரினவாத அரசு இராணுவ மேலாண்மையில் இருந்து எம்முடன் பேசப் பார்க்கின்றது. அது நியாயமான பேச்சுவார்த்தையாக இருக்க மாட்டாது. எனவே, உண்மையான பேச்சுவார்த்தை தேவை எனில், அரசாங்கம் கைப்பற்றிய இடங்களில் இருந்து வெளியேற வேண்டும்" என்றும் கோரிக்கை விடுக்கின்றார்.

முதலாவது, இப்படியான ஓர் நிலை தோன்றுவதற்கு, தான் தான் காரணம் என்பதை பிரபாகரன் மறந்து விட்டார். தனது இராணுவ பலம் பலவீனங்களை உணராது யுத்தத்திற்குள் தன்னை மூழ்கடித்துக் கொண்டது; 15 வருட கால யுத்தத்தில் மக்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள்,எவ்வளவு கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உணராது யுத்தத்தை தானே விரும்பி உருவாக்கியது; தான் உருவாக்கிய யுத்தத்தில் நின்று பிடிக்க முடியாமல் பின்வாங்கியவர்கள், "வெற்றிகரமாக பின்வாங்கியதன்மூலம் எனது வீரர்களை காப்பாற்றிக் கொண்டேன், அதனால்தான் முல்லைத்தீவைத் தாக்கி என்னால் அழிக்க முடிந்த" தென வீர வசனம் பேசுவது.

யாழ்ப்பாணத்தை சிங்கள இனவாத இராணுவம் ஆக்கிரமித்துள்ளது என்பது உண்மை. அவர்கள் அங்கு மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள் என்பதும் உண்மை. பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்கள், பாலியல் வன்முறைகள் நடைபெறுகின்றன என்பதும் உண்மை. இவை மனித நாகரிகத்தை மதிக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்ல.

ஆனால் யாழ்குடாநாடு பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்தபொழுது எத்தனை பேர் துரோகிகளென முத்திரை குத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்கள்; 4000க்கும் அதிகமான தமிழ் மக்கள் சூரிய வெளிச்சத்தையும் பார்க்க முடியாத நிலவறைகளில் அடைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் பலர் பட்டினியால் செத்தார்கள். ஆனால் இவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியாது. இவர்தான் இன்று இராணுவத்தின் அத்துமீறல்களைப் பற்றிப் பேசுகின்றார்.

பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்தபொழுது சாப்பிடுவதற்கு மாத்திரம் தான் வாய்திறக்க முடியும் என்ற சூழ்நிலை இருந்தது. மீறி யாராவது அவர்களைப் பற்றி ஒரு வசனம் பேசிவிட்டால் பச்சைக் கொச்சிக்காய் கொடுக்கப்பட்டது. அல்லது கூரிய பிளேட்டால் நாக்கை வெட்டும்படி வைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற ஆயிரக்கணக்கில் பணம்கட்டி புலிகளிடம் அனுமதி பெற வேண்டியிருந்தது. இதனால் அவர்களுக்கு விருப்பமில்லாதவர்கள் அனுமதி பெறமுடியாமல் இருந்தது.....

இப்படி கூறிக்கொண்டே போகலாம். இனவாத சிங்கள இராணுவத்துக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாமல் பிரபாகரனும் அவர்களது புலிப்படையும் அன்று நடந்து கொண்டனர் என்பதே உண்மை. இன்றும் கூட, வன்னியில் இருந்து வவுனியா வரவும், வன்னியில் இருந்து இந்தியா போகவும் இன்னும் அவர்கள் ஆயிரக்கணக்கில் அறவிடுகின்றார்கள் என்பதே உண்மை.

பிரபாகரன் பிரகடனப்படுத்திய யுத்தம், இதற்கு எந்த மாற்றுத் தீர்வையும் எற்படுத்தாது. யுத்தம் தொடரும் வரையில் இழப்புக்களும், அழிவுகளும், பாலியல் வன்முறைகளும் தொடரத்தான் செய்யும். இத ☞




தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் என்பதிலும் விட புலிகளை நிலைநிறுத்துவதற்கான போராட்டமாகவே இதுவரை பிரபாகரன் யுத்தத்தை நடத்தி வருகிறார்.

www.padippakam.com



# இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவர என்ன செய்யலாம்?



இரா. துரைரத்தினம்

வடகிழக்கில் நடந்துவரும் யுத்தம் ஏன் அரசால் நடத்தப்படுகின்றது? எதற்காகப் புலிகள் சண்டை பிடிக்கின்றனர்? என்னும் கேள்விகள் எமது சமூகத்திற்குள் உக்கிரமடைந்து வருகின்றது. இத்தோடு வடகிழக்கில் அரசிற்கெதிராகவும் புலிகளுக்கெதிராகவும் வெகுஜனப் போராட்டங்கள் ஆரம்பித்துள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், புலிகள் விடும் தவறுகளை திருத்தும் நோக்குடன் வெகுஜனப் போராட்டத்தை நடாத்த முடியாது. இதை புலிகள் அனுமதிக்க மாட்டார்கள்.

இந்நிலையில் ஜனாதிபதி, நிபந்தனையுடனான பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்துள்ளார். பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம், தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது புதியதோர் விடயமல்ல. பலவருடகாலமாக முயற்சி செய்யப்பட்டு வருவதுதான்.

1. திம்பு பேச்சுவார்த்தை.
2. இலங்கை-இந்திய ஒப்பந்தம்.
3. ஐக்கிய தேசியக் கட்சி-எல்.ரி.ரி.ஈ. இடையேயான பேச்சுவார்த்தை.
4. பொதுஜன ஐக்கிய முன்னணி-எல்.ரி.ரி.ஈ. இடையேயான பேச்சுவார்த்தை.

இப்படி பல பேச்சுவார்த்தைகள் பல தரப்பினராலும் நடத்தப்பட்டது. குறிப்பாக, இலங்கை அரசிற்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை என்பது இருதரப்பினரும் பரஸ்பரம் நம்பமுடியாதவர்களாக நடந்து கொள்வதிலேயே முடிகிறது. இந்நாட்டை மாறி மாறி ஆட்சி புரியும் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியனவே புலிகளுடன் பேசிவிட்டு, புலிகள் எங்களை ஏமாற்றி விட்டனர் எனச் சொல்கின்றனர்.

இவ்விரு கட்சிகளைத் தவிர வேறெந்தக் கட்சிகளுக்கும் இப்போதைக்கு பெரும்பான்மை பலத்தோடு ஆளும் கட்சியாக வரமுடியாது. மாறி மாறி ஆட்சி செய்த இந்த இரு கட்சிகளுமே பேசித் தீர்த்தவர்கள். இந்த நிலைமையில் புதிய நம்பிக்கையுடன் இவர்கள் பேசுவார்களா? ஏற்கனவே ஏமாந்துவிட்டோம், இனிமேல் ஏமாறக்கூடாது எனும் கருத்து இவ்விரு கட்சிகளுக்குள் பலமடைந்து வருகின்றது.

புலிகளுடன் பேசியதால், அவர்கள் இராணுவ ரீதியாக பலமடைந்தும், பல ஆயிரக்கணக்கான அரச துருப்புக்களை இழந்தும், கோடிக்கணக்கான பெறுமதிவாய்ந்த ஆயுதங்களைப் பறிகொடுத்தும், பல முக்கியமான இராணுவ கேந்திரங்கள் அழிக்கப்பட்டும், தென்இலங்கைப் பகுதியில் பயங்கரவாதம் உக்கிரமடைந்தும் வருகின்றது எனும் கருத்துக்கள் இராணுவ ஆய்வாளர்களிடமும் ஆளும் கட்சியினரிடமும் பலமடைந்து வருகின்றது.



இவர்கள், தங்களிடமே சகல அதிகாரங்களும் குவிந்திருக்கும் ஏதேச்சாதிகாரமான வெற்றியை அடைய விரும்புபவர்கள். தமது இராணுவ வெற்றியே இலக்கு என்னும் குறிக்கோளுடன் இருப்பவர்கள். இன்றுவரை, தமிழீழம் என்று சொல்லிக்கொண்டு ஏறத்தாழ ஏழாயிரம் அங்கத்தவர்களுக்குமேல் உயிரைப் பலிகொடுத்து, தமிழீழம்தான் இறுதித் தீர்வு என இருக்கும் புலிகள், இதற்குக் குறைந்தபட்ச தீர்வுக்கு முன்வருவார்களா?

புலிகளைப் பொறுத்தவரையில், அவர்களது இராணுவ வெற்றியை ஈட்டுவதற்கு ஆயிரக்கணக்கான அங்கத்தவர்கள் தமது உயிர்களைப் பறிகொடுக்கத் தயாரான நிலையில் உள்ளனர்.

இவர்கள், தங்களிடமே சகல அதிகாரங்களும் குவிந்திருக்கும், ஏதேச்சாதிகாரமான வெற்றியை அடைய விரும்புபவர்கள். தமது இராணுவ வெற்றியே இலக்கு என்னும் குறிக்கோளுடன் இருப்பவர்கள். இன்றுவரை, தமிழீழம் என்று சொல்லிக்கொண்டு ஏறத்தாழ ஏழாயிரம் அங்கத்தவர்களுக்குமேல் உயிரைப் பலிகொடுத்து, தமிழீழம் தான் இறுதித் தீர்வு என இருக்கும் புலிகள், இதற்குக் குறைந்தபட்ச தீர்வுக்கு முன்வருவார்களா?

அப்படி முன்வந்தால், இறந்த தங்கள் உறுப்பினர் குடும்பங்களுக்கு பதில் சொல்லவேண்டும். தலைவர் தனிப்பட விருந்து கொடுத்துச், சாவதற்கென வழியனுப்பி வைத்த தற்கொலைப் படையாளிகளின் ஆவிகளையும் அவர் ஏமாற்ற முடியாது. இவை மட்டுமன்றி, புலிகள் இயக்கத்தினருக்குள்ளும் முரண்பாடுகள் அதிகரிக்கும்.

இது போன்ற நிலையில் புலிகள் இருக்கும்போது, மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை நடந்தால் புலிகள் ஏமாற்றிவிடுவார்கள் என்ற கருத்து பரவலாக எல்லா தரப்பினரிடமும் உள்ளது.

புலிகள் ஏற்கனவே ஈடுபட்ட பேச்சுவார்த்தைகள் அனைத்தையும் தங்கள் இயக்கத்தின் இராணுவ வளர்ச்சிக்கே பயன்படுத்தியுள்ளனர். புலிகள் இதை இராணுவ தந்திரோபாயம் என்றே கருதுகின்றனர். எனவே இரு தரப்பினரும் பேசி எவ்வாறு சமாதானத்தை ஏற்படுத்தப்போகின்றனர்? இதனிடையே எப்படி விட்டுக்கொடுப்புகள் இடம்பெறப் போகின்றது?

இவைகளுக்கப்பால், மூன்றாந் தரப்பார் தலையிட வேண்டும் என சமாதானத்தை விரும்புகின்றவர்கள் கோருகிறார்கள். இரு தரப்பாருக்கு இடையில் பேசித் தீர்க்க முடியாத பிரச்சினைகள் இருக்கும் போது மூன்றாம் தரப்பார் தலையிட வேண்டியது தவிர்க்க முடியாததே. மூன்றாம்தரப்பார், அரசுக்கும் புலிகளுக்கும் நிபந்தனைகளைக் கூறி, அந் நிபந்தனைகளை மீறினால் இவ்விரு சாராரையும் தண்டிக்கக்கூடிய வல்லமை பொருந்தியவர்களாக வேண்டும்.

புலிகளால் ஜனநாயக சக்திகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தடைகள் - இயக்கங்கள், அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புக்கள் போன்றவற்றை தடைசெய்தமை - 85ம் ஆண்டிலிருந்து இன்றுவரை புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்ல, இந்த அமைப்புக்களின் உறுப்பினர்களை புலிகள் படுகொலை செய்து கொண்டே வருகின்றனர்.

குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாணசபையை ஈ.பி.ஆர்.எல்.எப். உருவாக்கியபோது புலிகள் பலவீனமடைந்து இருந்தனர். புலிகள் தங்கள் பலத்தை அதிகரிக்கும் நோக்குடன் இலங்கை அரச படைகளுடன் சேர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்களை அழிப்பதிலும், மாகாணசபைச் செயற்பாடுகளை தடுப்பதிலும் அக்கறையாக இருந்தனர்; தங்களைப் பலப்படுத்துவதற்கு சுயநலத்தோடு திட்டமிட்டுச் செயற்பட்டனர், இனியும் அவ்வாறே செயற்படுவார்கள் என்றே அவர்கள் நடவடிக்கைகள் நிரூபிக்கின்றன.

அரசும் புலிகளும் பேசி ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தாலும் கூட புலிகள் மற்றய கட்சியினரை, விமர்சிக்கும் மக்களை அழிக்கும் வேலையை நிறுத்துவார்களா? புலிகள் ஜனநாயக நடைமுறையை ஏற்றுக்கொள்ள இயலாதவர்கள் என்பதையே அவர்கள் பற்றிய பாடமாக நாம் எடுத்துக்கொள்ள முடிகிறது.

எனவே இவ்விடயங்களையும் கவனத்தில் எடுத்தே ஒரு சரியான திட்டத்தை தயாரித்தாக வேண்டும்.

---

னைப் பேசி புலி உறுப்பினர்கள் மத்தியில் குரோத உணர்வுகளை வளர்க்கலாம். இல்லையேல் இலங்கை அரசுக்கெதிரான பிரச்சாரத்திற்கு இதனைப் பயன்படுத்தலாம். ஆனால் இதனை முற்றுமுழுதாக நிறுத்திவிடமுடியாது.

இராணுவத்தை விட்டு ஓட்டம் பிடித்தவர்கள்தான், இன்று இலங்கையில் நடக்கும் கொள்ளை, கொலை, பாலியல் வன்முறைக்கு முக்கியமான சூத்திரதாரிகளாக இருப்பதாக அரசாங்கமே கூறுகின்றது. இந்நிலையில் இராணுவத்தில் இருப்போர் மாத்திரம் இதற்கு விதிவிலக்காக இருப்பார்கள் என நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

எனவே விடுதலைப் போராட்டம் ஒன்றை நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் பிரபாகரன், அல்லது மக்களது துன்பங்களைப் பற்றிப் பேசும் பிரபாகரன், இதை எவ்வாறு முடிவுக்கு கொண்டுவருவது என்பது தொடர்பாக சிந்திப்பதே பொருத்தமாக இருக்கும்.

போராடாது, இரத்தம் சிந்தாது, தியாகத்தைப் புரியாது எந்த ஒரு நாடும் சுதந்திரத்தைப் பெற்றதாக வரலாறு இல்லை என பிரபாகரன் கூறுகின்றார். அது உண்மையும் கூட.

ஆனால் தொடர்ந்தும் இரத்தக் களரியும் தியாகமும் எதற்காக? தனிநாட்டை பெறுவதற்கா? அல்லது அதிலும் விடக் குறைவான ஓர் தீர்விற்கா?

பிரபாகரனின் செய்தியில், உண்மையான சமாதானத்திற்காக தான் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் எனக் கூறியுள்ளார். கடந்த காலங்களில் நடந்த பேச்சவார்த்தைகளில் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவது எவ்வாறு?, ஈ.பி.ஆர்.எல்.எப். ஐ அழிப்பது எவ்வாறு?, பூநகரி முகாமை அகற்ற வேண்டும், புலிகள் ஆயுதங்களுடன் திரிய அனுமதி வேண்டும் என்ற விடயங்கள் பேசப்பட்டனவே தவிர அரசியல் தீர்வு தொடர்பாக எதுவுமே பேசப்படவில்லை.

எனவே, உண்மையாகவே புலிகளுக்கு சமாதானத் தீர்வில் அக்கறையிருந்தால், தமிழீழத்துக்கான மாற்றீடாக எதனைக் கோருகிறார்கள் என்பதை வெளியிடலாம், இது தொடர்பான பேச்சுவார்த்தைக்கும் முயற்சிக்கலாம். இல்லையேல் அரசாங்கம் வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாம். அப்படியான விடயங்கள் புலிகள் தொடர்பான ஓர் நம்பகத் தன்மையையும் உருவாக்கும்.

ஆனால், தனது இலட்சியமான தனிநாட்டுக்காகப் போராடப் போவதாய்ச் சொல்லிக் கொண்டிருப்பாரானால், தொடர்ந்து தியாகங்கள் செய்யத்தான் வேண்டும்; தொடர்ந்தும் இரத்தம் சிந்தத்தான் வேண்டும். ஆனால் இந்த தியாகங்கள் இரத்தங்கள் தமிழீழத்தை பெற்றுத் தராது என்பதை பிரபாகரன் உணராவிடினும் அவருடன் இருப்பவர்களாவது உணர வேண்டும்.

கடந்த காலத்தில் நடந்த பேச்சுவார்த்தைகள், யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கான ஓய்வு காலமாகவும் இராணுவத் தளபாடங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவுமே பயன்படுத்தப்பட்டது. மொத்தத்தில் பேச்சுவார்த்தை என்பது ஓர் தந்திரோபாயமாகவே பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்டது.

எனவே உண்மையான சமாதானத்தைப் பற்றிப் பேசுவதாயின், இவ்வணுகுமுறையில் மாற்றம் வேண்டும்.

ஆயுதங்களை வைக்குமாறு அரசு கோருவதும், இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருந்த பிரதேசங்களில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டுமென புலிகள் கோருவதும் நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்கள். எனவே, முன்நிபந்தனைகளைத் தவிர்த்து, அன்றாடத் தேவைகளுக்கான கோரிக்கைகளைத் தவிர்த்து அரசும் புலிகளும் அரசியல் தீர்வைப் பற்றிப் பேச முன்வர வேண்டும்.

நாம்தான் ஒரேகட்சி, நம்முடன் மாத்திரம் தான் பேசவேண்டும் என்பதெல்லாம், வெறும் ஏதேச்சாதிகாரத்தனமான சொற்றொடர்களேயல்லாமல் காலத்துக்கேற்ற முடிவுகள் அல்ல.

அரசு இராணுவ ரீதியில் பலமாக உள்ளார்கள். எனவே அவர்கள் எமது நியாயமான கோரிக்கைகளை ஏற்கமாட்டார்கள் என அஞ்சத் தேவையில்லை.

உண்மையான சமாதானத்துக்கான பேச்சுவார்த்தையில், நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவாக சர்வதேச சமூகம் எம்முடன் இருக்கும். எமது நியாயமான கோரிக்கைகளை மதிக்காவிடில் சர்வதேச ரீதியில் அந்நியப்படப் போவது சிறீலங்கா அரசே தவிர நாமல்ல. இதற்கு மூன்றாம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தமும் அவசியமாகும்.

எனவே, மக்களின் அழிவைத் தடுத்து, கௌரவமான நீதியான அரசியல் தீர்வொன்றைக் காண பிரபாகரன் முன்வர வேண்டும். போர்ப் பிரகடனமா அல்லது சமாதானப் பிரகடனமா? ஒரு தலைமுறையின் அழிவா அல்லது நீதியான தீர்வா? பிரபாகரன் தான் முடிவு செய்ய வேண்டும்.

அன்புடன்,
சுரேஷ்

---

.... நம் திறனாளிகள் நகர வாழ்க்கை சார்ந்தவர். உயர் கல்வி வாய்ப்புகள் உடையவர். அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் பதவி வகிப்பவர். வாழ்க்கை வசதிகள் இவர்களுக்குள் இறுக்கமாக இடம்பெற்றுள்ளன. இவை இல்லாமல் வாழ்க்கையைப் பற்றி இவர்களால் சிந்திக்க இயலாது. தமக்கான வாழ்க்கை வசதிகளில் இவர்கள் முனைப்புக் கொண்டிருக்கும் போது தனி உடைமை கூடாது, ஆதிக்கம் தேவையில்லை, பொருளியல் ஏற்றத் தாழ்வுகள் அவசியம் இல்லை, சுரண்டலும் ஒடுக்குமுறையும் எவ்வகையிலும் கூடாது என்பது போன்ற கருத்துக்களில் இவர்கள் உரம் பெறவில்லை. அரசு அதிகாரம் சார்ந்திருப்பதனால் இவர்கள் அரசை எதிர்க்க இயலாது. இதுமட்டுமல்ல, அரசு அதிகாரமும் முதலாளியமும் எவ்வாறு இவர்களைக் கட்டமைத்திருக்கின்றன என்பதை இவர்கள் புரிந்து கொள்ள இயலாது. அரசு அதிகாரமும் முதலாளியமும் புதிய காலனிய ஆதிக்கச் சூழலில் மக்கள் மீது சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் எவ்வாறு உச்ச அளவில் திணித்திருக்கின்றன என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இவர்கள், ஆதிக்கங்கள் தம் வழியேயும், தம்மை வைத்தும் செயல்படுவதையும் இவர்கள் புரிந்து கொள்ள இயலாது. ஆதிக்கங்களோடு ஒத்துச் செயல்படுவதன் மூலமே தமக்கான உயர் வாழ்க்கை கிடைத்துள்ளது என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். தம் உயர்வகை வாழ்க்கை, அடித்தள மக்களின் வாழ்க்கையையும், அவர்களின் படைப்பாற்றலையும் அழிக்கிறது என்ற உண்மை இவர்களுக்குத் தெரியாது. தம் வாழ்க்கையிலுள்ள அறிவும் ஆற்றலும் அழகும் அடித்தள மக்களின் வாழ்வை அழிப்பதன் மூலம் பெற்றவை என்ற உண்மையை இவர்கள் ஏற்க மாட்டார்கள். இவர்களது இலக்கியப் பார்வை கூட இப்படித்தான் உருவாயிற்று என்ற உண்மை இவர்களுக்குத் தெரியாது.



– கோவை ஞானி

www.padippakam.com




# பொறுப்பற்ற அறிக்கைகளால் அல்லலுறும் யாழ்ப்பாண மக்கள்...

விவசாயிகள் வெங்காயத்தை மலிந்த விலையில் விற்க வேண்டாம். நாங்கள் கிலோ 20 ரூபாவாக கொள்வனவு செய்து அனுப்புகின்றோம்..." இந்த அறிக்கையால், அல்லலுற்ற மக்கள் இன்று வெங்காயத்தை வெட்டித் தாக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளார்கள். இன்று எடுப்பார்கள் நாளை எடுப்பார்கள் என்று காவல் இருந்து, அந்த வெங்காயம் முளைத்து இன்று ஒன்றுக்கும் உதவாத நிலையில் உள்ளது.

'தூத்துக்குடியில் இருந்து சாக்கு வருவிக்கின்றோம், வந்ததும் வெங்காயம் கொள்முதல் செய்வோம்' என்று திரும்பத் திரும்பச் சொல்லி யாழ்ப்பாண மக்களையே வெங்காயங்களாக்கியது கச்சேரி நிர்வாகம்.

அடுத்ததாக, ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் பழச் செய்கையை ஊக்குவிக்க என்று வாழைச் செய்கைக்கு 5 பேருக்கு 2500 ரூபா மானியம் கொடுப்பதாகவும் (கிராம சேவகர் பிரிவுக்கு), ஐந்து பேரைத் தெரிவுசெய்து தரும்படியும் கிராமசேவகர் ஊடாக கேட்கப்பட்டது பின் அது நிற்பாட்டப்பட்டது.




காலத்துக்கேற்ற சூழ்நிலை போல, அரசாங்க நிர்வாகம் செய்யும் உத்தியோகத்தர்கள், மக்களைப் பொறுப்பற்ற தன்மையுடன் நடத்துகின்றார்கள்.

நெதர்லாந்து அரசாங்கம் யாழ்ப்பாண மக்களுக்கு என்று உருளைக்கிழங்கை இலவசமாக அனுப்பியது. இங்கும் சில இடங்களில் நெதர்லாந்திலிருந்து வந்த பிரதிநிதிகள், உருளைக்கிழங்கு மானியமாக கொடுக்கப்படப் போவதைச் சொன்னார்கள். பின் பெட்டி 1200 ரூபா என கச்சேரி தீர்மானித்தது என்று கமநல சேவை நிலையத்தில் சொல்லப்பட்டது. அங்கு விவசாயிகள், 'கிழங்கு மானியமாகத்தானே கொடுக்கப்படுகின்றது?' என்று கேட்டபோது, 'அது சுங்கத்தீர்வையும் ட்ரான்ஸ்போர்ட்டிங்' என்றும் கூறப்பட்டது.

அதன் பின் சனங்களின் முயற்சியால் இப்போது இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதுவும் விண்ணப்பித்தவர்கள் எல்லோருக்கும் இல்லை. உருளைக்கிழங்கு கொடுக்கும்போது பெட்டியைத் திருப்பித் தரும்படியும் கேட்கப்பட்டது. எப்படி இருக்கிறது? இங்குள்ள விவசாய மக்கள் இன்றும் தூத்துக்குடிச் சாக்குக்கு எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

எல்லோரும் இது உழைக்கின்ற காலம் என்று உழைக்கின்றார்கள். அரச அதிபருக்கு யாழ்ப்பாணத்தில் கடைகள் இருப்பதாகவும் கொழும்பில் 80 லட்சத்திற்கு வீடு வாங்கி இருப்பதாகவும் சொல்கின்றார்கள். "சீனி பங்கீட்டு அட்டைக்கு மீண்டும் 3 கிலோ" என்று பத்திரிகை விளம்பரம் கச்சேரியால். தேவையான சீனியை எடுத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு விநியோகிக்கும். ஆனால் மக்கள் கடைக்குப் போய் சீனி கேட்டால், அது 'உ' அட்டைக்கு (உத்தியோகத்தர் அட்டைக்கு).... எவ்வளவு அழகாக மக்களை ஏமாற்றிவிடுகின்றார்கள்! வெளிச் சந்தையில் 50 ரூபா சீனி. ஒவ்வொரு நிர்வாகத்தில் இருப்பவர்களும் இப்படியே உழைக்கின்றார்கள்.

பெரிதாக, மக்களுக்கு விதை நெல் எடுத்துக் கொடுப்பதாகவும், தாங்கள் ஏதோ மக்களுக்காக சேவை செய்யுமாப் போலும் காட்டிக்கொள்ளும் நிர்வாகம் நவம்பர் மாதத்தில் தான் விதை நெல்லைக் கொண்டுவந்து கொடுத்தது. இதனால் எத்தனை விவசாயிகள் விதைக்காமலே விட்டுவிட்டார்கள். காலத்தே பயிர்செய் என்பது இவர்களுக்குத் தெரியாது போலும். அவர்களுக்கென்ன, அவர்களுக்கு மாதாமாதம் சம்பளம் கிடைக்கிறது. விவசாயி பயிர் செய்ய முடியாவிட்டால் அவனின் வாழ்க்கைக்கு யார் உதவுவது?

மண்ணெண்ணை விநியோகம்! பெற்றோலியம் கோப்பரேஷனா கச்சேரியா யார் நிர்வகிப்பது? இது இரண்டுக்கும் இடையே இழுபறி நிலை. கள்ளச் சந்தையில் மண்ணெண்ணை தாராளமாக கிடைக்கிறது. ஆனால் 'பெற்றோல் செட்'டில் மண்ணெண்ணை இல்லை.

என்றைக்குமே யாழ்ப்பாண மக்களுக்கு இதே நிலைதான். எந்த அரசாங்கத்தாலும் மக்களுக்கு விமோசனம் இல்லை.

தீபாவளி மூட்டம் யாழ்ப்பாணம் வந்த கப்பல்களில் உணவுப் பொருட்களும் அத்தியாவசிய பொருட்களும் இறக்கு முன், நடுக்கடலில் வைத்து விசேட அனுமதியின்பேரில் குடிவகைகள்தான் இறக்கப்பட்டது. வியாபாரம் செய்து பழகிய யாழ்ப்பாண மக்கள்! இப்போது அதற்கு கச்சேரியும் உடந்தையாக இருக்க எல்லோரும் உழைக்கின்றார்கள்.

ஆனால் அப்பாவி மக்கள் அல்லலுறுகின்றார்கள். எப்படி வெளிச் சந்தைக்கு சீனி போகின்றது? எப்படி வெளிச்சந்தையில் மண்ணெண்ணை போகிறது? விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் என்ன செய்கின்றார்கள், தூங்குகின்றார்களா? தூங்குவதுபோல் பாவனை செய்கின்றார்களா?

கெடுபிடிகள்.... சூனியமான வாழ்க்கை.... புனர்நிர்மாணமோ புனர்அமைப்போ, வாழ்க்கையின் எந்த அடிப்படைத் தேவையுமே பூர்த்தி செய்ய முடியாத அரசாங்கம். யார்தான் மக்களைச் சிந்திக்கின்றார்கள்?

வரும் வெளிநாட்டவர்கள் யாழ்ப்பாணம் வந்தாலும், மக்களை நேரடியாக சந்திக்க விடாத இராணுவம். அவல வாழ்க்கை வெளி உலகத்திற்கு எப்படித் தெரியும்? இப்படியே இப்ப உள்ள சூழல் தொடருமானால் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தைத் தவிர வேறு மக்களே இருக்க மாட்டார்கள்.

அத்தியாவசிய பொருட்கள் விநியோகத்தில் முன்பு இருந்த அரசாங்கம் பரவாயில்லை என்று சொல்லும் அளவுக்கு நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது. இந்த நிலை நீடிக்குமாக இருந்தால் அதன் முடிவு விபரீதமாகத்தான் இருக்கும்.

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாண மக்களுக்கு வந்த அரிசி, நிவாரணமாகக் கூட இதுவரை கொடுக்கப்படவில்லை. ஜனாதிபதி பாரிஸில் இருந்து வந்து, எம்.பி.மாருக்குக் கொடுத்த விருந்துபசாரத்தில் 'என்னடி ராக்கம்மா' பாட்டுப் பாடி அவர்கள் விருந்துண்டு மகிழ்கிறார்களே தவிர, எங்கள் நிலைக்காக யாரும் அனுதாபப் படுவதாகக் காணவில்லை என்று மக்கள் விசனப்படுகின்றார்கள்.

இன்னலுறும் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் எம்.பி.மார்களை காலம் காலமாக ஏமாற்றி வந்த பாணியிலேயே இந்த அரசும் விருந்தும் கேளிக்கைகளும் வைத்துப் பேசாமடந்தைகளாக்கிவிட்டதாகச் சொல்லிக் கவலைப்படுகின்றார்கள். வசீகரச் சிரிப்பிலெல்லாம் மயங்கிக் கைதூக்கிவிட்டு வந்த முன்னோடிகளின் கதைதானா இப்போதும்?

யாழ்ப்பாண மக்கள் நிலை இது என்றால் வன்னிக்கு ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் சென்ற மக்களின் நிலை சொல்லுந்தரமன்று. இப்படியே இன்னல் உறுவதுதான் ஈழத் தமிழ் மக்களின் நிலையா?

இந்த சந்தர்ப்பத்திலாவது இன்னலுறும் மக்களுக்காக கொழும்பு அரசியல்வாதிகள் தியாகங்கள் செய்யவோ குரல் கொடுக்கவோ தவறுவார்களேயானால் அவர்களைத் தமிழ் சமூகம் மன்னிக்கவே மாட்டாது.

இந்த மண்ணில் பிறந்து, இந்த மண்ணைவிட்டே பிரியாது, இந்த மண்ணோடுமண்ணாகிக் கொண்டு மக்கள் இங்கு இருக்க, விருந்துபசாரங்களிலும் கேளிக்கைகளிலும் பங்குபற்றி, அவரவர் கட்சித் தேவைகளையே அரசிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டு, கைதூக்கிவிட்டு வரும் அரசியல்வாதிகளை மக்கள் என்றைக்குமே மறக்கமாட்டார்கள்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் திறந்தவெளிச் சிறைச்சாலையில் மக்கள் அல்லல் உறுகின்றார்கள். நினைத்த இடத்திற்கு நினைத்த நேரத்தில் போக முடியாது. திடீர் சுற்றிவளைப்பு, சோதனைச் சாவடியில் தாமதிக்க வைத்துக் குடைதல், ஊரடங்கு உத்தரவுகள்....

எத்தனை உயிர்கள், இரவு நேரங்களில் வைத்திய வசதி இல்லாததால் வைத்தியசாலைக்கு கொண்டு போக முடியாததால் பிரிந்து இருக்கிறது? ஊரடங்கு நேரத்தில் ஒரு பெண் கடுமையான இரத்தப் போக்கின் காரணமாக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு செல்லும் வழியில் சோதனைச் சாவடிகளில் ஏற்பட்ட தாமதங்களால் உயிர் பிரிந்தது. சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இருந்து கொண்டுசெல்ல அம்புலன்ஸ் வண்டி வசதியில்லாததாலும், தனியார் வாகனம் யாரும் விடாததாலும் எத்தனை எத்தனை உயிர்கள் பிரிந்திருக்கும்... தெரியாமல் பிரிந்த உயிர்கள் எத்தனை? இவற்றிற்கெல்லாம் யார் பதில் சொல்வார்கள்?

எத்தனை கிருஷாந்திகள், எத்தனை ரஜனிகள்?.... மனித உரிமை செயலணி கூட பெரிதாக எதையும் செய்ததாக காணவில்லை என்றே மக்கள் விசனப்படுகின்றார்கள்.

பக்கச்சார்பு அற்ற மனித உரிமைகள் அமைப்பே யாழ்ப்பாணத்தில் இயங்கமுடியாவிட்டால், இந்த மனித உரிமை செயலணிக்குழுவால் அரசாங்கத்திற்கு ஆதரவாக உண்மைகளை மூடிமறைக்கத்தான் முடியுமே தவிர, வெளிக்கொணர முடியாது.

வெளியுலகுக்குக் காட்டவும், அரசாங்கம் தனது இமேஜை காப்பாற்றிக் கொள்ளவும், மனித உரிமைகள் செயலணிக்குழுவை யாழ்ப்பாணத்தில் இயங்க வைக்க (அரசாங்க சார்பற்ற) முன்வந்ததையும் யாழ்ப்பாண மக்கள் அறிவார்கள்.

மொத்தத்தில் தமிழ் மக்களை சந்திரிகா அரசும், யாழ்ப்பாண நிர்வாகிகளும், இராணுவமும் புலிகள் மீதான வெற்றியைப் பறைசாற்றிக் கொள்வதற்கான அடையாளமாகத்தான் பார்க்கிறார்கள். குறுக்கு

> "நினைத்த இடத்திற்கு நினைத்த நேரத்தில் போக முடியாது. திடீர் சுற்றிவளைப்பு, சோதனைச் சாவடிகள், ஊரடங்கு உத்தரவுகள், கெடுபிடிகள், திறந்தவெளிச் சிறைச்சாலை, சூனியமான வாழ்க்கை, வாழ்க்கையின் அடிப்படைத் தேவையையே பூர்த்தி செய்யாத அரசாங்கம்.... யார்தான் மக்களைச் சிந்திக்கிறார்கள்?"

வழிகளால் மக்களைத் தங்கள் வசதிக்குக் காட்டிக் கொள்ளவே நினைக்கிறார்களே தவிர, மக்கள் நலனைப்பற்றி எந்தக் கரிசனையுமில்லை.

அப்படி நினைப்பது தவறு என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத்தான் போகின்றார்கள்,கொழும்பில் இருக்கும் அரசியல் வாதிகள் கூட...

*-யாழ்ப்பாணத்திலிருந்து விசு*




திருகோணமலை மாவட்டத்தில் தமது வாழ்விடங்களை இழந்து அகதி முகாம்களில் வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்கள், தமது அவல வாழ்விலிருந்து மீள அரசுக்குச் சொந்தமான நிலங்களில் குடிசைகளை அமைத்துக் குடியேறினர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, சுபிட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்தித் தரப்போவதாக உறுதியளித்த இந்த அரசாங்கமும், இதற்கு முன் ஆட்சிபீடமேறிய ஆட்சியாளர்களுக்குச் சற்றும் சளைக்காது, இனவாத சக்திகள் தமிழ் பேசும் மக்களை அரசுக்குரிய நிலங்களிலிருந்து விரட்டியடித்து வருவதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கிறது. தடுத்து நிறுத்தவோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேறு ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கவோ இந்த அரசாங்கமும் முன்வரவில்லை.

கடந்த பல வருடங்களாக பேரினவாத ஆட்சியாளர்களின் திட்டமிட்ட அடிப்படையிலான தமிழ்ப் பிரதேசங்கள் ஆக்கிரமிப்பு, இனச்சுத்திகரிப்பு, அழித்தொழிப்பு நடவடிக்கைகளால் திருகோணமலை மாவட்டத்தில் எல்லைப்புறக் கிராமங்களிலிருந்தும், பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்தும் பல ஆயிரக்கணக்கான தமிழ்பேசும்மக்கள் அரச படைகளினாலும் சிங்கள காடையர்களினாலும் காட்டுமிராண்டித்தனமாக விரட்டியடிக்கப்பட்டனர்.

அவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட மக்கள் மிக நீண்ட காலமாக அகதி முகாம்களையே தமது வாழ்விடமாகக் கொண்டிருந்தனர். அகதி வாழ்வின் அவலங்களான கலாச்சாரம், பண்பாடு, கல்வி, போன்ற மனித விழுமியங்களின் சீரழிவுகளால் சிதைந்து கொண்டிருந்த மக்களின் ஒரு பகுதியினரே லிங்கநகரில் குன்றும் குழியுமாக இருந்த இடங்களை பெரும் சிரமங்களுக்கு மத்தியில் சீராக்கி குடியமர்ந்தனர்.

தற்போது மீண்டும் அம் மக்களில் 40 குடும்பத்தினரை விரட்டியடித்து இராணுவம், முகாம் அமைத்துள்ளது. மேலும் இம் முகாமை விஸ்தரிக்கும் நோக்குடன் 300 இற்கும் மேற்பட்ட மக்களை, வெளியேற்றுவதற்கான நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறது.

இதன் விளைவாக, தமது அவலநிலைமைகளை வெளிப்படுத்தும் நோக்குடன் அப்பகுதி மக்கள் கடந்த 23.11.96 சனிக்கிழமை ஓர் ஜனநாயக ரீதியான உண்ணாவிரதப் போராட்டத்தையும் மேற்கொண்டனர். இது தொடர்பாக அரசு எதுவித ஆரோக்கியமான நடவடிக்கைகளை எடுத்ததாகவும் தெரியவில்லை.

எனவே வாழ்விடங்களை இழந்து நட்டாற்றில் தவிக்கும் மக்களுக்காக அனைத்து ஜனநாயக, முற்போக்கு சக்திகளும், மக்களும் ஆட்சியாளர்கள்-அரச படையினரது இந்நடவடிக்கைகளைக்கண்டித்துக் குரல் கொடுக்கவேண்டுமென இக்கடிதமூலம் கோரிக்கை விடுக்கின்றோம்.

*திருகோணமலை ஈ.பி.ஆர்.எல்.எவ்*
*அலுவலகத்திலிருந்து இ. சிவராமன்*

படிப்பகம்

www.padippakam.com



# சாண் ஏற முழம் சறுக்கும் சமாதானம்

இன்னும் மூன்று வருடங்களில் இந்த நூற்றாண்டு விடைபெறப்போகிறது. நாம் கொலையையோ, கொலை எம்மையோ இன்னும் விட்டபாடில்லை. ஒன்று மறியாத ஜனங்களைச் சந்தித்து மௌனமாகச் சிரிக்கிறது மரணம்.

உண்மையைக் கண்டும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடத் துணியாமலிருக்கிறோம், இருப்பின் மீதுள்ள காதலால். அழிவு ஒரு பகுதியில் தாண்டவமாட, மறுபகுதியில் கண்ணை மூடிக் கிடக்கிறோம், உயிரின் மீதான ஆசையால்.

அழிவைச் சந்திக்கும் மக்களின் உணர்வுகள் என்ன என்பதே தெரியாமல் திக்குத் தெரியாத காட்டில் விட்ட மாதிரித் தவிக்கிறோம்? அம்மக்களின் உணர்வுகள் எங்கள் முகங்களில் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை.

"இப்பொழுது அந்த மக்களுக்கு சமாதானம் தேவை. ஆகவே யுத்தத்தை நிறுத்து!" அல்லது "யுத்தத்தை நிறுத்தி அவர்களுக்கான அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்து!" வெற்றுக் கோஷங்கள்.

கோழிக்குஞ்சு வெளியேறிய வெறும் முட்டைக் கோதான தமிழீழத்தின் எல்லைகளைப் பேசுவதாக இருந்தால் சுமுகமாக வே.பிரபாகரனுடன் பேசமுடியும் (அதுவும் எவ்வளவு சாத்தியப்பாடோ தெரியாது. ஏனெனில் பிரபாகரனின் மனதில் கீறிய தமிழீழத்தின் படம் சிறுக்கப் போவதில்லை)

யானையின் தும்பிக்கையில் இருக்கும் பூமாலை எங்கள் கழுத்தில் விழாதோ என்று தலையைப் பத்திரப்படுத்திக் கொண்டிருக்கும் தென்பகுதி தமிழ்க் கட்சிகளுக்கும் எங்கே தம் மக்களின் அவலம் புரியப் போகிறது? அந்த மக்களுக்காக அவர்கள் தங்களைத் தியாகம் செய்த காலமெல்லாம் மலையேறிப் போயிற்று. இப்போ கட்சி அல்லது தலைவர் என்ற நிலைக்குப் போயிருக்கிறது.

இப்படி ஒரு நிலை ஏற்படக் காரணம் இவர்கள் மாத்திரமல்ல, சகல தமிழ்க் குடிமக்களையும் அது சாரும். மக்கள் மக்களென்று நாம் கருத்து நிலையில் அடித்துக் கொள்ளாமல், நாங்கள் நாங்கள் என்று எப்போ எங்கள் கடைவாய்ப் பற்களை நீட்டிக் கொண்டோமோ அப்போதே எங்கள் எல்லோருக்குமான சாவுமணி அடித்தாகிவிட்டது.

இன்று எம்மக்கள், 'அந்தக்கால கூட்டணி அரசியல் மேலானது அவர்கள் என்ன செய்தாலும் எம் தலைக்கு எந்த ஆபத்துமில்லை' என்று சொல்லுற அளவுக்கு எங்கள் பொறுப்பின்மை வந்தாகிவிட்டது.

இனியாவது செய்த பாவத்திற்கு பரிகாரம் தேட நாம் ஏன் முயற்சிக்கக்கூடாது? (நம்மில் சிலபேர் பாவமேதும் செய்திராவிட்டாலும், நடந்து கொண்டிருந்த பாவங்களைப் பார்த்தும் பாராமலும் இருந்தோமே அதுவும் பாவம்தான்.)

இன்றைய நிலையில், யுத்த விரும்பிகளுக்கும் தலைவர்களுக்கும் யுத்தம் தேவையானது. அதனைக் கைவிடும் பட்சத்தில் அவர்களது உயிர் பறிபோகும் நிலை ஏற்படலாம். ஆனாலும் இவர்கள் யுத்தகளத்தில் நேருக்குநேர் சமர் புரியப் போவதில்லை. அப்பாவி உடல்களின் எண்ணிக்கை இவர்களின் வெற்றி நோக்கிய பயணத்தின் படிகளாக அமையும் என்ற நம்பிக்கையிலிருக்கிறார்கள். இவர்களைப் போல் 'யுத்தத்தை நிறுத்து' என்று அர்த்தமில்லாமல் புலம்புவது சரியல்ல.

மக்களுக்குத் தேவை சமாதானம். ஆம்! நிரந்தரச் சமாதானம். வரலாற்றில் மிகவும் தாகமாக இருக்கிறோம் எமக்குத் தேவை உடனடியாக ஒரு கப் தேனீரல்ல; அது இல்லாது போனாலும் நிரந்தரமாக பருகக்கூடிய நீர்.

"யுத்தத்தை நிறுத்து" அதன்மூலம் "சமாதானப் பேச்சுவார்த்தை" என்று குளறித் தலைவர்களின் காதுகளை அடைக்க வைக்கலாம். அவர்களும் யுத்தத்தை நிறுத்திச் சமாதானத்தைத் தொடங்குவதாக பாவனை செய்யலாம். மீண்டும் ஏதோ ஒரு இடைஞ்சலைக் காட்டி யுத்தத்தைத் தொடரலாம். இதுவா நாம் கேட்டது? இதுவா நாம் எதிர் பார்ப்பது?

எங்கள் ஒவ்வொருவரினதும் மண்டைக்கயிற்றைப் பங்கிட்டு, எம்மை ஆளவந்த தலைவர்கள் எடுத்துக் கொண்டார்கள். எங்கள் சாதலைக் கண்டு அவர்கள் தம் வாழ்தலை மிகவும் உன்னதமாக நேசிக்கிறார்கள்!

இவ்வாறு நியாயங்கள் ஒளித்திருக்கும் போது 'யுத்தத்தை நிறுத்து' என்று முழங்க என்ன நியாயமிருக்கிறது? ஆகவே, யுத்தம் நடக்கட்டும்! மக்கள் அழியட்டும்! மக்கள் என்ன? கலைகளும் கலாசாரங்களும் கொஞ்சம் கொஞ்சமாக அழியட்டும்!

ஆனால் மேசைக்கு வாருங்கள்! பேசுகிறவர்கள் ஒருபோதும் அடிபட்டதில்லையே! எனவே, மேசையிலிருந்து பேசுங்கள். இந்த நிலைமைக்கு நாம் தலைவர்களைக் கொண்டுவர முடிந்தால், அதுவே தியாகத்தின் உன்னதமாக அமையும்.

ஏதோ ஒரு கட்டத்தில் பேச்சுவார்த்தை யுத்தத்தை நிப்பாட்டும். அது நிரந்தரமான ஒரு தீர்வுக்கு அடிகோலும். இல்லை, ஏதோ ஒரு கட்டத்தில், யுத்தம் சகலதையும் நிப்பாட்டும். எங்கள் தலைவிதி மட்டுமல்ல, இந்த நாட்டின் சகல இன, மத மக்களின் தலை விதி.

வருங்காலச் சந்ததியினரின் தலைவிதியையாவது மாற்ற சமாதானப் பாலத்திற்கு ராமர் அணிலைப் போலவேனும் உதவி செய்ய நம்மால் ஏன் முடியாமலிருக்கிறது?
வாருங்கள்! அணிதிரண்டு கோஷமிடுங்கள் **"பேசுங்கள்!"** என்று.

யுத்தத்தை நிறுத்தவும் வேண்டாம்.
நிபந்தனைகளும் வேண்டாம்.
மக்களுக்காக மக்களுக்காக என்று ஏமாற்றியதெல்லாம் போகட்டும்.
நீங்களும் மனிதர்களாகப் பிறந்தீர்கள் என்ற நப்பாசையில் கேட்கிறோம் பேச்சுவார்த்தையைத் தொடருங்கள்.



*மக்களுக்காக மக்களுக்காக என்று ஏமாற்றியதெல்லாம் போகட்டும். நீங்களும் மனிதர்களாகப் பிறந்தீர்கள் என்ற நப்பாசையில் கேட்கிறோம், பேச்சுவார்த்தையைத் தொடருங்கள்!*

- ச.ஜே.
கொழும்பு

---




சந்திரிகா அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டமான சமுர்த்தி திட்டத்திற்கு ஆட்களைச் சேர்க்கும் நடவடிக்கையாக, நமது நாட்டின் ஒருசில மாவட்டங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசச்செயலகப் பிரிவு நீங்கலாக கிட்டத்தட்ட அனைத்துப் பகுதிகளிலும் நேர்முகத் தேர்வு நடைபெற்று நியமனங்களும் வழங்கப்பட்டுவிட்டன.

வடக்கே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளையும், கிழக்கில் ஒரு சில இடங்களையும் தவிர மற்றைய அனைத்து இடங்களிலும் நேர்முகத் தேர்வு நடைபெற்று, நியமனங்கள் வழங்குவதில் இழுபறிநிலை ஏற்பட்டும், சில இடங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டும் உள்ளன.

வடகிழக்குப் பிரதேசங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு), தெலுங்கு காங்கிரஸ் போன்ற அரசியல் கட்சிகள் ஆட்களைச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டின. இக்கட்சிகளுக்கு சமுர்த்தி நியமனமானது, கோட்டா முறையில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் தெரிகின்றது.

சமுர்த்தி அதிகார சபையினருக்கு இவற்றைப் பகிர்ந்தளிப்பதில் சில சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணத்தால், மேற்படி கட்சிகளை அழைத்து தங்களுக்குள் பேசி ஒரு முடிவுக்கு வரும்படி அதிகாரசபையினர் கூறினர்.

இதற்கிடையில் அம்பாறை மாவட்டத்தின் சில தமிழ் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு நியமனக் கடிதங்களும் அனுப்பப்பட்டு, இளைஞர் யுவதிகள் சிலநாட்கள் சமுர்த்தி வேலைகளிலும் ஈடுபட்டனர். பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தலையீட்டினால் அந்நியமனங்கள் உடன் இரத்தாகின.

சமுர்த்தி அதிகார சபையினருக்கு ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்க, அவர்கள் மேலே கூறப்பட்ட கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தனர். எல்லோரும் ஒரே இடத்தைக் கேட்டால் - அதாவது ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரே கிராமத்தைக் கேட்டால் – நாங்கள் இன்ன கட்சிக்குத்தான்போடுவோம் என்ற முடிவுக்கு வரமுடியாது. நீங்களே பேசித்தீர்த்துக் கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டனர்.

இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒத்துழைக்கவில்லை. அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்பட்ட நியமனங்களை இரத்துச் செய்வதற்கு கூட்டணியினர் அரும்பாடுபட்டனர்.

குறைந்தபட்சம் இதற்கே ஒத்துழைக்காத இவர்கள் எப்படி இந்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைக்கப் போகின்றார்கள்? வறுமையால் வாடும் இளைஞர் யுவதிகளின் உணர்வுகளை கஷ்டங்களைப் புரிந்துகொள்ளாமல் அவர்களின் கைக்கு எட்டியதை வாய்க்கு எட்டாமல் தட்டிப் பறிப்பதில் இவர்களுக்கு என்ன இலாபம் ஏற்படப் போகின்றது? இவர்கள் எதை எதிர் பார்க்கின்றனர்?

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனிக்காட்டுராஜாவாக அரசியல் நடாத்திய காலங்களில் தமிழ் சமூகத்தையும், இவர்கள் வாய்ப் பேச்சைக் கேட்டு அணிதிரண்ட இளைஞர்களையும் ஏமாற்றியதை தமிழ் சமூகம் ஒருபோதும் மறந்துவிடாது. அவர்கள் வரலாற்றில் விட்ட தவறுகளின் பக்கங்களை இதுபோன்ற காரியங்களால் நிரப்பியபடியே செல்கின்றனர்.

உதவி செய்யாவிட்டாலும் உபத்திரமாவது செய்யாதிருப்பாயாக!

முன்னொரு காலத்தில் இளைஞர்களின் கோபத்துக்கு ஆளான இவர்கள், தொடர்ந்தும் இப்படிப்பட்ட வேலைகளால் இளைஞர்களைப் பிழையான வழியில் சிந்திக்க வைப்பதுடன், மக்களையும் முட்டாள்களாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

10.12.96 இல் வந்த தினசரிப் பத்திரிகைகளில் அமைச்சர் திசாநாயக்கா அவர்கள், "சமுர்த்தி நியமனம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில்" என செய்தி வந்துள்ளது.

இந்நியமனமானது இம்மாவட்டத்தின் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவைத் தவிர்ந்த அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் வழங்கப்பட இருந்தது. இதன்படி பட்டிப்பளை, வெல்லாவெளி, வவுணதீவு, ஆரையம்பதி, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுகள் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இவை தடைப்பட்டமைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே காரணகர்த்தாக்களாகும்.

- மட்டக்களப்பிலிருந்து
ஆத்மன்.

---

# இரண்டு பக்கமும் பயம்தானே....

நாம் இன்னும் எமது சொந்த வீட்டிற்குச் சொல்லவில்லை. இடம்பெயர்ந்து ......அண்ணா வீட்டில்தான் இருக்கிறோம். படையினர் அடிக்கடி வருவார்கள். இயக்கப் பொடியளும் இடையிடையே வருவார்கள்.
இங்கு உணவுப் பொருட்களைப் பொறுத்தமட்டில் அநேகமாக எல்லாம் கிடைக்கின்றன. மீன் கிலோ 250-300 ரூபாய். மரக்கறி, அரிசி என்பன சிரமமின்றிப் பெறக்கூடியதாய் உள்ளது.
இங்கு வாகனங்கள் மண்ணெண்ணெய்யில்தான் இன்னமும் ஓடுகிறது. எங்கள் வாகனமும் மண்ணெண்ணெய்தான். மண்ணெண்ணெய் 'செற்'றில் கிடைக்கிறது. வெளிக் கடைகளில் போத்தல் 100 ரூபா.
தற்போது 'செக் பொயின்ற்'களும் ஓரளவு குறைக்கப் பட்டுவிட்டது.
இந்தமுறை இங்கு மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை. சில இடங்களில் பறக்க விட்டிருந்த புலிக் கொடிகளையும் இராணுவத்தினர் வந்து அறுத்து எறிந்துவிட்டார்கள். இப்போ இங்கு இயக்கம் நடமாடுவதை சனங்கள் விரும்புவதில்லை. சில இடங்களில் இராணுவத்தினரிடம் சொல்லி விடுகிறார்கள். அண்மையில் லோறன்ஸ் என்ற பொறுப்பாளர் இவ்வாறு கொல்லப்பட்டார்.
சிங்கள ராணுவம் வரப்போகிறது என்று கூறி, அதனைத் தடுக்க 100 கோடி ரூபா வேண்டும் என்று கேட்டு பாதுகாப்பு நிதி திரட்டினார்கள். சனங்களும் நிர்ப்பந்தத்தின் பேரிலும், சிலர் விரும்பியும் கொடுத்தார்கள். அவற்றையும் கொண்டு, சனங்களுக்கு முதல் புலிகள் சென்றுவிட்டதால், மிகவும் எரிச்சலடைந்துள்ளார்கள். இதனாலும் இதுபோன்ற சம்பவங்களாலும் வெறுப்படைந்துள்ள அனேகமான சனங்கள் 'கடந்த ஆறு வருட கால ஆட்சி இனிமேல் வேண்டாம்; அவற்றைவிட இது பரவாயில்லை, எவ்வளவோ மேல்' என்றே கூறுகின்றார்கள்.
புலிகளை மட்டுமல்ல, இதர இயக்கங்களையும் சனங்கள் வெறுத்துப்போய்த்தான் இருக்கிறார்கள். ஓரளவு படித்தவர்களானாலும், சாதாரண மக்களானாலும் மற்ற இயக்கங்களைப் பற்றிக் கதைத்தால் ஒரு வித்தியாசமான ஆவேசத்துடனேயே இன்னும் கதைக்கிறார்கள்.
உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் கட்டாயம் வாக்களிக்க வேண்டுமானால் சிங்களக் கட்சிகளுக்குப் போட்டாலும் போடலாம், தமிழ் கட்சிகளுக்குப் போடுவதால் எந்தப் பயனும் இல்லை என்றே பேசிக் கொள்கிறார்கள்.
இப்போதைக்கு நான் எழுதக் கூடியது இவ்வளவுதான். இதையும் பயந்து பயந்துதான் எழுதினேன். இரண்டு பக்கமும் பயம்தானே. நீ திரும்பத் திரும்பக் கேட்டு எழுதியதால் எழுதினேன்.
.....அண்ணாவுக்கு(ஜெர்மனி) கடிதம் எழுதியுள்ளேன். காசு அனுப்புவார். ரெலிபோன் எடுத்தால் கடிதம் கிடைத்ததாக சொல்லவும்.
மற்றவை பின்னர்.

அன்பு தங்கை, மாலினி,
......., யாழ்ப்பாணம்.

படிப்பகம்

www.padippakam.com



# அதிகரித்துவரும் பதட்டம்



ரி. சிறிதரன்

யுத்தம் ஒன்றையே குறியாகக் கொண்ட அரசின் நடவடிக்கைகளினால் முழுநாடும் ஸ்தம்பிதமடையும் நிலையை நோக்கிச் சென்றுள்ளது.

யுத்தத்தை நடாத்திக் கொண்டு, சமாதானத்தைச் சொல்லிக்கொண்டு காலத்தை ஓட்டுவது என்ற நிலைப்பாட்டிற்கு அரசு சென்றுள்ளது.

1994 ஆகஸ்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்தபோது பாரிய நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகள் மக்களிடம் இருந்தன. தேர்தலுக்கு முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி பல வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்திருந்தது. அதில் முக்கியமானவை:

1. யுத்தத்திற்குப் பிரதியீடாக சமாதானம்.
2. தமிழ் மக்களின் சுயமரியாதை கௌரவத்தை நிலைநாட்டும் அரசியல் தீர்வு.
3. ஜனநாயகம் மனித உரிமை அமைப்புக்களை கட்டியெழுப்புவது.
4. சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குதல்.
5. பாண் விலையைக் குறைத்தல்.
6. சாதாரண மக்களின் நலன்களைக் கணக்கிலெடுத்த திறந்த பொருளாதாரம்.

பொதுஜன முன்னணி அரசு பதவி ஏற்று இரண்டு வருடங்கள் ஆயிற்று. மேற்கூறிய பிரதான வாக்குறுதிகளில் எது எது நிறைவேற்றப்பட்டது?

மக்கள் மனதில் அரசியல் மாற்றம் ஏற்பட்ட போது இருந்த நம்பிக்கைகள் இப்போது இருக்கின்றதா?

சிறிது விபரமாகப் பார்ப்போமேயானால், மக்கள் பாலைவனக் கானல் நீரை நோக்கி ஏமாற்றம், நிராசையுடன் ஒடிக்கொண்டிருப்பது தெரிகிறது.

யுத்தம் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டதில் புலிகள் வகித்த பாத்திரம் நிராகரிக்க முடியாததாக இருப்பினும், அரசும் யுத்தம் என்பதைத் தவிர நிகழ்ச்சி நிரலில் பிரதானப்படுத்தக்கூடிய விடயம் வேறெதுவும் இல்லை. சமாதானமும் யுத்தத்துடன் ஒட்டப்பட்ட விடயமாகிவிட்டது. ஆம்! சமாதானத்துக்கான யுத்தம் என்பதே இன்று பிரதான கோசமாகிவிட்டது.

யுத்தம் புரியும் சிங்கள இராணுவத்தினர் நாட்டின் இறைமையையும் ஐக்கியத்தையும் கட்டிக்காக்கும் மண்ணின் மைந்தர்கள் ஆகிவிட்டார்கள்.

இந்த இராணுவத்தில் இருப்பவர்களுக்கு நாடு கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஜனாதிபதி சந்திரிகா அவர்களே இந்த யுத்தத்தில் கொல்லப்பட்ட பொதுமக்கள் உட்பட சகல தரப்பினரையும் கருத்திற்கெடுக்காமல் காயப்பட்ட இராணுவத்தினருக்கு இரத்தம் வழங்குமாறு நாட்டுமக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

இந்த அறைகூவலின் பாரதூரத் தன்மையை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். சிங்கள இராணுவத்தின் வரலாற்றுப் பின்னணியிலிருந்துதான் இதனைப் புரிந்துகொள்ள முடியும். இந்த இராணுவம் இனவாதத்தின் அடித்தளத்தில் தான் கட்டப்பட்டது. இந்த இனவாதம் 'இறைமை', 'ஒருமைப்பாடு' என்ற போர்வையின் கீழ் மறைந்து கொண்டது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் தான் இந்த பிரமாண்டமான இராணுவ யந்திரம் கட்டியமைக்கப்பட்டது. அரச பயங்கரவாதத்தின் மறுதலையாகவே தமிழ் மக்கள் மத்தியில் பயங்கரவாதமும் உருவானது.

ஆனால் தமிழர்கள் பற்றி ஒரு தீண்டத்தகாத எண்ணங்கொண்ட இந்த யந்திரத்தில், அடிப்படை மாற்றங்கள் எதனையும் மேற்கொள்ளாமல், அது எந்தப் பிற்போக்கான பாரம்பரியத்தைக் கொண்டதோ அதனைத் தட்டிக் கொடுப்பது போல்தான் ஜனாதிபதியின் இரத்தம் வழங்குவதற்கான அறிவித்தல் அமைந்தது.

ஏற்கனவே செல்லரித்துப்போன அழுகி நாற்றமெடுக்கும் அரசு யந்திரத்தை மேலும் கெட்டிப்படுத்தும் விதமாகவே ஜனாதிபதியின் பேச்சு அமைந்திருக்கிறது.

இதற்கப்பால் சாதாரண சிங்கள தமிழ், முஸ்லீம், மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவது, நாட்டின் பல்தேசியத் தன்மையை உறுதிசெய்வது என்ற ஜனாதிபதியின் இதயசுத்தியான சிந்தனைக்கு சிங்கள அரசியல்வாதிகளின் மரபு ரீதியான சிந்தனைப்போக்கு பெரும் ஊறுவிளைவிப்பதாகவே அமைகிறது.

தற்போது யுத்தத்தில் நம்பிக்கை இழந்து தப்பியோடிய இராணுவத்தினரைப் பிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. புதிதாக ஆட்கள் சேராவிட்டால் கட்டாய இராணுவ சேவைக்கு ஆட்திரட்டுவது பற்றியும் யோசிக்கப்படுகிறது.

இந்தச் சிந்தனை முறை யுத்த நெருக்கடியை மேலும் அதிகரித்து சகல சமூகங்களும் அவநம்பிக்கை கொள்வதற்கே வழிவகுக்கும்.

சாதாரண சிங்கள மக்களோ தமிழ் மக்களோ அதிதீவிர நிலைப்பாடுகளில் நின்று சிந்திப்பதில்லை. அவர்கள் இந்த நாட்டில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு சமாதானம் உருவாக வேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

ஆனால் யுத்தத்தின் நிழல் நாடு முழுவதும் பரவி விட்டது. இறுகிய முகமும் விறைத்த துப்பாக்கிகளும் மணல் மூடைகளும் மாத்திரமே எஞ்சி நிற்கிறது.

தெருவுக்குத்தெரு சோதனைச் சாவடிகள் என்றாகிவிட்டது.

ஒவ்வொரு தமிழரும், தான் பயங்கரவாதி அல்ல என்பதனை தனது சகல சாதுரியங்களையும் கொண்டு நிரூபித்தாக வேண்டும். இராவணனால் சிறைப்பிடிக்கப்பட்ட சீதை, தன் கற்பை நிரூபிக்க, நெருப்பில் இறங்க ராமனால் நிர்ப்பந்திக்கப்பட்டதைப் போல சகல தமிழரும் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

இராணுவ யந்திரத்திற்கு வரம்பற்ற அதிகாரம் வழங்கப்பட்ட பிரேமதாசா யுகத்தில், ரயரில் எரியும் சிங்கள இளைஞர்கள் பற்றி அறிந்தோம். ஆனால் சந்திரிகா அரசு பதவியேற்று, சமாதானப் பேச்சு வார்த்தைகள் முறிவடைந்து, யுத்த சக்திகள் உற்சாகப்படுத்தப்பட்ட காலத்தில், தென்னிலங்கை வாவிகளில் தமிழர்களின் உருச்சிதைந்த பிணங்கள் மிதந்தன.

ரிவிரச, சத்ஜெய வெற்றி களேபரத்தில், இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பல தமிழ் இளைஞர்கள் கதி என்னவென்று தெரியாமல் போயிற்று. கிருஷாந்தி தொடக்கம் 10வயதுச்சிறுமி தேனுகா வரை இராணுவத்தின் பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகியதாக செய்திகள் வந்தவண்ணம் உள்ளன.



தமிழ் இனவாதம், மக்களைச் சிறைவைத்து, சிறுவர்களை-பாலகர்களை யுத்தத்திற்குக் காவு கொடுப்பதாக வடகிழக்கில் மாற்றியுள்ளது.

மனித உரிமைப் பாதுகாப்புக் குழுக்களோ, சட்டம் நீதித் துறையோ தமிழ் மக்களைப் பொறுத்த வரை பெறுமதியற்ற கையாலாகாத அமைப்புக்களாக மாறி வருகின்றன.

டென்மார்க்கிலிருந்து நாடு கடத்தப்பட்ட 18வயதுப் பெண் சித்திரா ராஜேந்திரன் புலிப் பயங்கரவாதி என அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ரூபவாகினி அறிவித்தது. அவரின் நிலையைப் பார்வையிட வந்த டென்மார்க் பிரஜைகள், பத்திரிகையாளர்கள், அவர்கள் தங்கியிருந்த மவுண்ட் லவேனியா ஹோட்டலிலேயே சிறைவைக்கப்பட்டார்கள்.

இறுதியாக, உறவினர் என யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள் கைவிலங்கிட்டே விமானத்தில் அழைத்து வரப்பட்டார்கள். ஆனால் இறுதியாக நீதிமன்றம் அவர் பயங்கரவாதி அல்ல எனக் கூறி விடுதலை செய்தது.

இந்த அவமானகரமான துன்பியல் நாடகங்கள் இந்த நாட்டில் தொடர்ச்சியாக அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

யுத்தம் நடைபெறும் வடகிழக்கில், சிவில் நிர்வாக அமைப்பிற்கு என்ன மதிப்பிருக்கிறது? வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் எல்லாமே இராணுவ பிரிகேடியர்களின் முற்றுமுழுதான அதிகாரத்தின் கீழேயே நிர்வகிக்கப்படுகின்றன. சிவில் நிர்வாகம் என்பது இங்கு வெறும் பொம்மைதான்.

வவுனியா அகதி தடுப்பு முகாம்களுக்கு பொறுப்பாக இருக்கும் பொலிஸ்காரர்கள், தாம் அரச அதிபரைவிட அதிகாரம் கொண்டவர்கள் என்று மார்தட்டாக் குறையாக நடந்து கொள்கிறார்கள்.

வவுனியா முகாம்களிலிருந்து ஆட்களைக் கடத்துவதற்கு பணம் அறவிடப்படுகிறது. சட்டம் ஒழுங்கு துறையின் சிலருக்கும், கொழும்பு லொட்ஜ் உரிமையாளர்கள் சிலருக்கும் சம்பந்தம் உண்டு. ரூபா பத்தாயிரத்திலிருந்து 25ஆயிரம் ரூபா வரை அறவிடப்படுகின்றது.

சூழ்ந்துவிட்ட அவலம் எல்லா உறவுகளையும் வெறும் பணப் பட்டுவாடாவாக மாற்றியுள்ளது.

அரசு, இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டவர்கள் ஐ.நா. சபைக்கும் முறையிடலாம் என்று கூறுகிறது. எல்லாம் உலகத்தை ஏமாற்றும் நாடக பாத்திர வசனங்கள்.

மக்களின் நடமாடும் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில், மக்களின் மற்ற சுதந்திரங்களைப் பற்றி எவ்வாறு பேச முடியும்?

தமிழ் மக்களை கையாளும் பொறுப்பு பொலிசாரிடமும் இராணுவத்திடமும் ஒப்படைக்கப்பட்டதால் அவர்கள் மக்களின் எஜமானர்களாக நடந்துகொள்ள முனைகிறார்கள்.

ஏற்கனவே புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் அடிமைகளாக இருந்தவர்கள், இப்போது புதிய எஜமானர்களுக்கு அடிமைகளாக இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

எங்கும் எப்படியும் அடிமை வாழ்வு என்ற நிலை மக்களை மொண்ணைகளாக, தற்குறிகளாக மாற்றும் செயற்பாடாகவே அமைகிறது. அவர்கள் இருதரப்பாரிடமும் மந்தைகளுக்குரிய உத்தரவுகளையும் வசவுகளையும் தான் பெறுகிறார்கள். அவர்கள் தமது சுயத்தை வெளிப்படுத்த முடியாமல் இருக்கிறார்கள்.

யுத்த நெருக்கடி அதிகரித்துச் செல்லச் செல்ல மக்களின் இந்த வாழ்வு பற்றிய கேள்வி பெரும் ஆவேசங்களை உருவாக்கும். அப்போது எந்த யுத்த சக்தியும், சர்வாதிகார சக்தியும் அவர்களை வென்று கொள்ள முடியாது.

மக்களின் இதயங்களையும், மனங்களையும் வெல்வது பற்றி ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் பல தடவை கூறியிருக்கிறார். ஆனால் நடைமுறை மேற்கூறிய விதமாகத் தான் இருக்கிறது.

புலிகளின் நிகழ்ச்சி நிரலில் யுத்தத்தைத் தவிர வேறேதுவும் இல்லை என்றால், ஜனநாயக அரசும் தனது நிகழ்ச்சி நிரலை அதேவிதமாக அமைக்க முடியாது.

பிரச்சினைகளின் வேரைக் கண்டுபிடிக்க வேண்டும். இதைத் திரும்ப திரும்பக் கூறுவது ஒரு நகைப்பிற்கிடமான விடயமாகவும் இருக்கும். வேர் யாருக்கும் தெரியாததல்ல. ஆனால் வேரை நேரடியாகப் பார்க்க யாரும் விரும்பவில்லை.

வேரைப் பார்க்கும்போது, அடுத்த தேர்தலில் வாக்கு வங்கி பற்றி யோசிக்கிறார்கள். அரசினால் முன் வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகள் கூட பிக்கல் பிடுங்கலில் சிதிலமாகிவிட்டது.

ஆக, யுத்தம் என்ற ஒரேயொரு வேலைத்திட்டம் மாத்திரம் தான் முன்னணியில் நின்று கொண்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியதைப் போல.

'இலங்கை மக்களே! உங்கள் எல்லா நலன்களையும் யுத்தக் காளிக்கு காணிக்கையாக்குங்கள்' என்று எல்லாத் தரப்பினருமே அறைகூவல் விடுக்கிறார்கள்.

இந்த நாடு சடசடத்து எரிகையில், அந்த நெருப்பிற்கு இன்றும் விறகுகளாக மானிடம் வீசப்பட்டுக் கொண்டிருக்கிறது. ☞



ஏற்கனவே புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் அடிமைகளாக இருந்தவர்கள், இப்போது புதிய எஜமானர்களுக்கு அடிமைகளாக இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கும் எப்படியும் அடிமை வாழ்வு என்ற நிலை மக்களை மொண்ணைகளாக, தற்குறிகளாக மாற்றும் செயற்பாடாகவே அமைகிறது. அவர்கள் இருதரப்பாரிடமும் மந்தைகளுக்குரிய உத்தரவுகளையும் வசவுகளையும்தான் பெறுகிறார்கள். அவர்கள் தமது சுயத்தை வெளிப்படுத்த முடியாமல் இருக்கிறார்கள்.

www.padippakam.com



சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறை. இதன் பிதாமகர் காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆணைப் பெண்ணாக்கவோ பெண்ணை ஆணாக்கவோ மாற்றமுடியாதே தவிர, தன்னால் மிகுதி எல்லாவற்றையும் செய்யமுடியும் என்று குறிப்பிட்டார்.

ஆனால் அதே பதவியை இல்லாதொழிப்போம் என்று வரிந்து கட்டிய பொதுஜன முன்னணி அரசு இன்று சந்தர்ப்ப சூழ்நிலை சரியில்லை என்று கூறுகிறது.

பொதுஜன முன்னணி பதவியேற்ற உடனே இந்த பதவியை ஆறுமாதத்தில் இல்லாதொழிப்போம் என்று கூறியது. ஆனால் இன்று அது ஒரு அத்தியாவசிய பதவியாகிவிட்டது.

பாண் விலையை 3ரூபாவாகக் குறைத்த பொதுஜன முன்னணி அரசினால் பாணின் விலை வானத்தில் வலம் வருவதை தடைசெய்ய முடியாமல் போய்விட்டது.

போக்குவரத்துச் செலவுகளும் அவ்வாறுதான். நாட்டின் பாதுகாப்பு, இறைமையின் பெயரால் மக்களின் அன்றாட வாழ்க்கையே நாடுமுழுவதும் துயரமாகிவிட்டது.

நாட்டு மக்களின் மனநிறைவும், மகிழ்ச்சியும், ஐக்கியமும்தான் உண்மையான இறைமையாக இருக்க முடியும்.

அதேபோல் தமிழ் இனவாதம், மக்களைச் சிறைவைத்து, சிறுவர்களை-பாலகர்களை யுத்ததிற்குக் காவு கொடுப்பதாக வடகிழக்கில் மாற்றியுள்ளது.

வடகிழக்கில் மீன்பிடியும் விவசாயமும் மங்கி மறைந்து கொண்டிருக்கும் நிலையில், மக்கள் அகதிகளாக தெரு நிழலிலும் பாடசாலைகளிலும் ஒதுங்கிவிட்ட நிலையில் உற்பத்தி நடவடிக்கைகளைப் பற்றி எவ்வாறு சிந்திக்க முடியும்?

நாளாந்த ஜீவனோபாயத்தை நடாத்த முடியாமல் தொழிலாளர்கள் மூச்சுத் திணறுகிறது. ஒரு சுழல் வட்டமாக மாறிமாறி வேலை நிறுத்தங்கள் இடம்பெறுகின்றன.

அரசோ, எவ்வாறாவது கடன் வாங்கியாவது யுத்தத்தை நடாத்தி முடிக்க முயலுகிறது. ஆனால் யுத்தத்தின் மூலம் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது என்பது நிதர்சன உண்மை.

எனவே, என்ன விலை கொடுத்தாவது யுத்தத்தை நிறுத்தி, இராணுவ சக்தியின் முக்கியத்துவத்தைக் குறைத்து, சமாதான ஜனநாயக சக்திகள் மனித உரிமைச் சக்திகளின் செயற்பாடுகளுக்கு உத்வேகம் அளிக்கும் போதுதான் இந்த நாட்டில் நிம்மதி பிறக்கும். மக்கள் சமாதானமாக வாழும் நிலை தோன்றும். ●

# மீன்கள் இப்பொழுது....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

"நாங்கள் எந்தவித உதவியுமற்றவர்கள்" என தந்தையார் கலங்குகின்றார். இது ஆயிரத்தில் ஒன்று. ஆனால், இப்படி பல விடயங்கள் பயத்தின் காரணமாக வெளிவராமலே போகின்றன என மனித உரிமைகள் பாதுகாப்பு அங்கத்தவர் ஒருவர் கூறினார்.

மட்டக்களப்பில் வாழ்க்கை வழமைபோல் போகின்றது. ஆனால் இரவு 6 மணிக்கு பின்னர் நகரம் செத்தது போல் போய்விடுகின்றது.

அதேநேரம் புலிகள் தமது பங்கையும் விட்டுக் கொடுக்கவில்லை. இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஓர் வியாபாரியிடம் பல இலட்சங்களைக் கேட்டுக் கடிதம் அனுப்பினர். அவ்வியாபாரியும் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில்-நேரத்தில் அத் தொகையை வழங்கியுள்ளார்.

"அவர்களிடம் இருந்து யாரும் தப்பிவிட முடியாது" என இன்னொரு வியாபாரி கூறினார்.

ஒருநாட் காலையில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள கடைசி காப்பரணைக் கடந்து நாம் புலிகளின் பகுதிக்குப் போனோம். அதிலிருந்த சோம்பேறித்தனமான சிப்பாய் எமக்கு எந்தவித பிரச்சினையும் தராமல், நாம் போவதற்குஅனுமதி வழங்கினார். நாம்அங்கு எமது மணிக்கூடுகளை அரைமணி நேரம் பின்தள்ளி வைத்தோம். ஏனெனில் புலிகள் புதிய நேரத்தைக் கடைப்பிடிப்பதில்லை.

நாம் புலிகளின் காவலரண்கள் எதனையும் அங்கு காணவில்லை. ஆனால் மூன்று புலிகள் ஆயுதங்களுடன் போனதைக் கண்டேன்.

வான்வழியாக அரசாங்கம் இன்னும் இங்கு செல்ல முடியும், இப்பிரதேசத்தின் மீது செல் தாக்குதல்களையும் ஆகாயத் தாக்குதல்களையும் நடாத்துவதன் மூலம் புலிகளுக்கு நெருக்குதல்களை ஏற்படுத்த முடியும்.

டிசம்பர் 2ம் திகதி கிரான் என்ற கிராமத்தில் இரண்டு பாதுகாப்புபடையினரை புலிகள் சுட்டுக் கொன்றார்கள். ஒருவாரமாக இராணுவத்தினர் இக்கிராமத்தின் மீது தொடர்ச்சியான செல் வீச்சுக்களை நடாத்தினர். இரண்டு சிவிலியன்கள் இத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். 4வயதுக் குழந்தை உட்பட 13 சிவிலியன்கள் காயமடைந்தனர். எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் நடந்தால் முழுக்கிராம மக்களுமே பாதிக்கப்படுவார்கள் என அவர்கள் இராணுவத்தால் பயமுறுத்தப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் அரசியல் தலைவர் என்று சொல்லப்படும் துரை எம்முடன் பேசமறுத்துவிட்டார்.ஆனால் தமது பிரதேசத்தில் இவர்கள் சென்றுவர அவர் அனுமதி அளித்தார்.

பின்னர் நாம் அங்கிருந்து கரடியனாறு போனோம்.அங்கு பிரபாகரனுக்கு மிக நெருக்கமானவர் எனக் கருதப்படும் இன்னொரு முக்கிய புலி உறுப்பினரைச் சந்தித்தோம். அவர் பேசுவதற்கு சம்மதித்தார்.

"யுத்தத்தை தொடர்ந்து நடாத்த அரசாங்கத்துக்கு நிதி ஆதாரங்கள் தேவையாதலால், அவற்றை திரட்ட முடியாத வகையில் சிறீலங்காவின் பொருளாதாரத்தை நாம் முடமாக்குவோம். இதன் மூலம் யுத்தத்தை அவர்கள் தொடரமுடியாத சூழ்நிலை ஏற்படும்."

"எமது இலக்குகள் பொருளாதார இலக்குகளே. சமய ஸ்தாபனங்களை தாக்குவது எமக்கு சர்வதேச ரீதியாக எதிர்விளைவுகளை உருவாக்குவதால், அப்படியான தாக்குதல்களை நாம் நிறுத்தியுள்ளோம். நாம் முன்னர் விட்ட தவறுகளில் இருந்து பல விடயங்களை கற்றுள்ளோம். இதனால் அப்படியான பல விடயங்களை நாம் கைவிட்டுள்ளோம்." பகிடியாக இவர் பேசும் பொழுது, இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களை Uncleared areas) என்றே குறிப்பிடுகின்றார்.

நாம் சமாதானத்திற்கான வழிமுறைகளை வரவேற்கின்றோம். அத்துடன் பிரித்தானிய மத்தியஸ்தத்தை வரவேற்பதாகவும் இவர் கூறினார்.

நாங்கள் இரண்டு அரசுகளால் ஆட்டிப்படைக்கப்படுகிறோம் என மக்கள் அங்கலாய்க்கின்றார்கள். தமக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமைகளால் விரக்திக்குட்பட்டு மரத்துப்போய்விட்ட சூழ்நிலையிலேயே உள்ளார்கள்.எங்களை தனியே விடுங்கள் எங்கள் பிரச்சினைகளை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம். எங்கள் பாட்டில் வாழவிடும் வரை நாம் கூச்சலிட்டுக்கொண்டுதான் இருக்க வேண்டுமென கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவர் கூறினார்.

மட்டுநகரில் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் வாழ்ந்தே ஆக வேண்டும். ஆனால் மட்டக்களப்பின் பெயர்பெற்ற மீன்கள் இப்பொழுது பாடுவதில்லை.

மட்டக்களப்பிலிருந்து
எம். மகேசன்

நன்றி : Sunday Times

# குறுக்கெழுத்துப் போட்டி-29

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | ■ | 5 | 6 | 7 |
| 8 | | | ■ | | ■ | 9 | | | |
| | ■ | 10 | 11 | | 12 | | | ■ | |
| ■ | 13 | ■ | 14 | | | | ■ | 15 | |
| 16 | | | | | ■ | ■ | 17 | | ■ |
| 18 | | ■ | 19 | | 20 | 21 | ■ | 22 | 23 |
| ■ | 24 | 25 | | ■ | 26 | | 27 | | |
| 28 | | | | 29 | ■ | 30 | | | |
| | ■ | | ■ | 31 | 32 | ■ | | ■ | |
| 33 | | | | ■ | 34 | | | | ■ |

## இடமிருந்து வலம்

1. வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்படாத மாவட்டம்.
5. பம்பைமடுவிலிருந்து அமைச்சரையும் அதிகாரிகளையும் காப்பாற்றியவர்களுக்கு கிடைத்தது.
8. திறமைக்கு விடப்படும் அறைகூவல்.
9. தென்திசைக் காற்று.
10. நற்காரியங்களுக்கு உதவாத, யமனுக்கு உரியதாய்க் கருதப்படுகிற பொழுது.
14. பொதுவாகக் கவிஞர்கள், கதாசிரியர்கள், காதலர்கள் எல்லாம் இந்தக் குதிரையில் ஏறிப் பறப்பவர்கள்.
15. வீட்டு வளர்ப்பு மிருகத்தைச் சொன்னால் சிலர் எழுந்து நடனமிடக் கூடும்.
16. செய்தித் தாள். (தலைகீழ்)
17. முதுகைத் தடவிச் சென்றால் காற்று, இதனுள் நுழைந்தால்தான் மூச்சு.
18. தென் மாகாணத் தலைநகர். (தலைகீழ்)
19. மூக்கில் சளி பிடித்தால் வருவது.
22. குதிரை. (தலைகீழ்)
24. சௌகரியம். (குழம்பி)
26. செல்வம்.
28. தாயின் தாய்.
30. உடலிலிருந்து வெளியேறும் உப்புத் திரவம்.
31. வகைப்படுத்தப்பட்ட பிரிவு.
33. கோயிலில் இறைவன் இருக்கும் இடம்.
34. நிலா.

## மேலிருந்து கீழ்

1. மன்னார் மாவட்ட பிரதேசசபைகளில் ஒன்று.
2. குரங்கிற்கு உள்ளது; குறும்புப் பையனைச் சொல்வது. (தலைகீழ்)
3. பொறுமையாக இருந்தாலும் சரி, பூமிப் பகுதியாக இருந்தாலும் சரி முடியும் இடம். (தலைகீழ்)
4. குடாநாடு.
5. கனி.
6. அடுப்பிலும் உண்டு; நிலச் சுரங்கத்திலும் உண்டு. (தலைகீழ்)
7. சுமை அழுத்தாமல் இருக்க தலையில் வட்டமாகச் சுருட்டி வைத்துக் கொள்ளும் துணி.
9. அலங்காரம்.
11. மகிமை.
12. ராகம். (தலைகீழ்)
13. கேலி.
15. உபாத்தியாயர்.
16. ஆண்கள் இடுப்பில் கட்டுவது.
20. விதியையும் வெல்லலாம். இது இருந்தால்.
21. கையில் இருப்பது; பெண்களுக்கென்றால் காந்தள் மலர், வெண்டைக்காய் உவமைகளாகும். (தலைகீழ்)
23. பொது நிகழ்ச்சி. (குழம்பி)
25. பணம் இருந்தென்ன, இது வேண்டும் வீட்டில். யுத்தம் நின்றால் வரும் நாட்டில். (தலைகீழ்)
27. ஆச்சரியம்.
28. களைப்பு. (குழம்பி)
29. பெண்.
32. கதவுக்குள் இருப்பது; கன்னத்திலும் வாங்குவது. (தலைகீழ்).

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி-28 விடைகள்:

### இடமிருந்து வலம்:

1. பீரிஸ்
3. பாரபட்சம்
6. தாமரை
8. கைப்பணி
9. கோதண்டம்
11. தடம்
12. மாய(ம்)
13. அகம்பாவம்
16. சுருதி
17. நாடு
18. லம்பாடி
19. தத் 20.கக்கம்
21. அம்பை 22.கரி
23. அகத்தி
24. கன்னிமாடம்
27. கலிமா
30. பரிவு
31. வெம்பல்

### மேலிருந்து கீழ்:

1. பீடிகை
2. ஸ்தாபனம்
3. பாரை
4. பந்தம்
5. சண்டமாருதம்
7. மணி
9. கோடம்பாக்கம்
10. பைத்தியம்
11. தவம்
13. அநாகரிகம்
14. கடுக்கன்
15. பாலம்
21. அதிகம்
23. அடவு
25. பனி
26. மாரி
28. பலி
29. மால்

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**வி. குமரகுருபரன்,**
**விநாயகர் வீதி,**
**மட்டக்களப்பு.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**


1. ந. கந்தசாமி,
   அளுத் மாவத்தை, கொழும்பு-15.
2. கீதா சரோஜினி,
   குருமண்காடு, வவுனியா.
3. இரத்தினசிங்கம்,
   21/1, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.
4. பூ. துவாரகன்,
   சிவன்கோவில் வீதி, தோணிக்கல், வவுனியா.
5. சி. மகேந்திரன்,
   பிரதான வீதி, திருகோணமலை.

பண்பாட்டுச் சூழலில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தங்குதடையற்ற வன்முறைகளுக்கும் நாசவேலைகளுக்கும் மத்தியில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள மாற்றுக் குரல்கள், உயரிய மதிப்பீடுகளுக்கான குரல்கள் தொடர்ந்து போராடி வருகின்றன. அக்குரல்கள் சமூகத்தால் பாதாள அறைகளுக்கு அனுப்பப்பட்டு தனிமையில் வைக்கப்படுகின்றன. மிகவும் பலவீனமான நிலையிலிருக்கும் மாற்றுக் கலாசாரத்திற்கான நடவடிக்கைகளை வளர்த்தெடுப்பது பிரக்ஞையின் தளத்தில் இயங்கும் ஒவ்வொருவரது பொறுப்பாகும்.

– நன்றி: காலச்சுவடு

www.padippakam.com





# புத்தகம் புதிது

**புத்தகம் : எழுதாத வரலாறு. இலங்கை திராவிடர் இயக்கம் பற்றிய ஆய்வு.**
**ஆசிரியர் : பெ. முத்துலிங்கம்.**
**வெளியீடு : சமூக அபிவிருத்தி நிறுவனம், இல. 8, முல்கம்பல வீதி, கண்டி.**
**பக்கங்கள் : 122.**
**விலை : ரூபா 100.**

புத்தகத்தின் அட்டை சிவப்பு நிறத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்துக்கள் மத்தியில் நிலவும் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் எழுப்பிய டாக்டர். பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களுக்கும், தந்தை ஈ.வெ.ரா.பெரியார் அவர்களுக்கும், மற்றும் இலங்கையிலும் இந்தியாவிலும் சாதிக் கொடுமைக்கு எதிராக குரலெழுப்பியவர்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

சமூகஅபிவிருத்தி நிறுவகத்தின் வெளியீட்டுத் துறையின் முதலாவது வெளியீடாக வெளிவரும் இந்த ஆய்வு நூல் மறக்கவும், மறைக்கவும் பட்ட இலங்கை திராவிடர் இயக்கம் பற்றிய ஓர் ஆதாரபூர்வமான நூல் என இந்நூலின் பதிப்பாசிரியர் அந்தனி ஜீவா அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

பத்திரிகையாளராகவும், ஆய்வாளராகவும் இன்று பலரிடையே அறிமுகமாகியிருக்கும் தோழர் பெ. முத்துலிங்கம் எழுதுகளில் இடதுசாரி பாரம்பரிய அரசியல் தொழிற்சங்கப் பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டவர். அதன் தொடர்ச்சியில் தோழமை இயக்கங்களோடு கொண்ட உறவினால் எண்பதுகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிடிக்குள் சிக்க வேண்டிய நிலையில் இந்தியாவில் சிலகாலம் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டவர்.

பின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொதுமன்னிப்பு பெற்று இலங்கை திரும்பி, தொண்ணூறுகளில் அரசு சார்பற்ற அபிவிருத்தி நிறுவன துறையினூடாக மீண்டும் தன்னை சமூகப் பணிகளில் பிணைத்துக் கொண்டுள்ளார் என புத்தகம் நூலாசிரியரை அறிமுகம் செய்து வைக்கிறது.

இலங்கை திராவிடர் இயக்கம் பற்றி ஆசிரியர் அவ்வியக்கத்தின் நோக்கு நிலையில் நின்று இந்நூலை எழுதியுள்ளார். பல்வேறு விதமான ஆவணப்படுத்தப்பட்ட அரிய தகவல்களை இப்புத்தகம் உள்ளடக்கியுள்ளது. அவற்றைத் தேடித் தொகுத்து உருப்படியாக ஒரு நூலை வெளிக்கொணர்ந்திருக்கும் ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது.

புத்தகத்தில் இடம்பெற்றிருக்கும் சிங்கள மொழிமூலமான ஆவணங்கள் முழுமையாக தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள பல ஆவணங்களினதும் முழுமையான தமிழ் மொழிபெயர்ப்பையும் உள்ளடக்கியிருந்தால் மேலும் பலர் இந்த புத்தகத்தினை வாசித்து பயன்பெற முடிந்திருக்கும்.

இ.தி.மு.க. கழகத்தின் செயற்பாடுகளை இனவாத நடவடிக்கைகள் என முத்திரை குத்தி கம்யூனிஸ்ட் கட்சி உட்பட இனவாதிகளும் பத்




திரிகைகளும் விஷமப் பிரச்சாரங்களில் ஈடுபட்டதற்கான ஆவணங்களைத் தந்திருக்கும் ஆசிரியர், அவ்வாறே இ.தி.மு.க. சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பான ஆவணங்களையும் உள்ளடக்கியிருந்தால், 2–3 தசாப்தங்களிற்கு பின், மறைக்கப்பட்ட ஒரு இயக்க வரலாற்றை கற்கப்புகும் எமக்கு அவ்வியக்கம் பற்றிய தெளிவான பார்வை கிட்டியிருக்கும். சுயமாக மதிப்பிட முடிந்திருக்கும்.

இ.தி.மு.க. முடக்கப்பட்டதற்கு, செயலற்றதாய் ஆனதற்கு அந்த இயக்கத்திற்கு வெளியே காரணங்களைத் தேடியுள்ள அளவிற்கு இயக்கத்திற்கு உள்ளே அதற்கான காரணங்கள் ஆராயப்படவில்லை.

இவ்வாய்வின் இறுதி நோக்கம், 'மலையகத்தில் மறக்கப்பட்ட வரலாற்றினை இன்றைய தலைமுறையினர் அறியும் வகையில் வெளிக் கொணர்வதும், மறைக்கப்பட்ட வரலாற்றினை அறிவதன் ஊடாக புதிய வரலாற்றுக்கு வித்திட வேண்டும் என்பதும் எதிர்பார்ப்பு' என தெரிவித்திருக்கும் ஆசிரியர், அந்த இயக்கத்திற்கு உள்ளேயும் அந்த இயக்கம் செயற்பட முடியாமற் போனதற்கான காரணங்களைத் தேடித் தெரிவித்திருக்க வேண்டும்.

'நாடற்ற பிரச்சினை தொடர்பாக இ.தி.மு.க. தொடர்ச்சியாக முன்னெடுத்த போராட்டத்தின் விளைவாக பண்டாரவளைச் சம்பவம் உருவானதுடன், அதன் தாக்கம் இப்பிரச்சினைக்கு ஓர் தீர்வைக் காணும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது.' இவ்வாறு சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் உருவாக்கம் பற்றி புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் தனி ஒரு இயக்கத்தின் சாதனையாக கொள்ளமுடியாது. ஒரு இயக்கத்தின் வரலாறு எழுதப்படும்போது, சமகாலத்தில் செயற்பட்ட இதர இயக்கங்களின் செயற்பாடுகளை, மறக்கப்பட்ட ஒரு இயக்க வரலாற்றை எழுதுபவர்களே மறந்து விடலாகாது.

மலையக மக்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் இறுதி அங்கமாக ஜே.வி.பி. தலைவர் விஜேவீர கருதியிருந்தார் என்பதனை நூல் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மலையக மக்கள் தொடர்பாக விஜேவீர கொண்டுள்ள நிலைப்பாட்டினை அறிந்த இ.தி.மு.க. தலைவர் இளஞ்செழியன், மலையகத்திற்கெதிராக இடதுசாரி புரட்சிகர இயக்கம் ஒன்று கொண்டிருந்த நிலைப்பாட்டினைக் களைய வேண்டும் எனும் நோக்குடன் செயற்பட்டார். இதனால் இ.தி.மு.க. நடாத்திய கூட்டம் ஒன்றில் ஜே.வி.பி. தலைவர் விஜேவீரவையும் அழைத்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய விஜேவீரவின் உரையிலிருந்து, அவர் தனது நிலைப்பாட்டினை கைவிடவில்லை என்பதனை கண்டறிந்து இ.தி.மு.க. தலைவர் இளஞ்செழியன், அவருக்குப் பதிலளிக்கும் வகையில் அக்கூட்டத்தில் உரையாற்றியதாக மெச்சியிருக்கும் ஆசிரியர், நூலில் இறுதிப்பகுதியில் திரு. இளஞ்செழியன் ஜே.வி.பி.யுடன் இணைந்து ஆயுதப் புரட்சியை மேற்கொள்வதை நிராகரித்துவிட்டதாக குறைப்பட்டிருக்கிறார்.

இளஞ்செழியன் ஜே.வி.பி. பற்றி கொண்டிருந்த நிலைப்பாட்டின் நியாயத்தை புத்தகத்தின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் நூல் ஆசிரியர் எவ்வாறு இந்த நிலைப்பாட்டிற்கு வந்தார் என்பதனை தெளிவுபடுத்த தவறிவிட்டார்.

---

**புத்தகம் : செட்டை கழற்றிய நாரங்கள்**
**ஆசிரியர் : ரவி (பாலமோகன்)**
**வெளியீடு : விடியல் பதிப்பகம், 3, மாரியம்மன் கோவில் வீதி, உப்பிலிப்பாளையம். கோவை-641015.**
**விலை : 20 ரூபாய்.**

1990 தொடக்கம் 1998 வரையான ஐந்து வருட காலப் பகுதியில், தான் எழுதிய கவிதைகளை ரவி (பாலமோகன்) தொகுப்பாக வெளியிட்டுள்ளார்.

இது அவரது முதல் கவிதை தொகுதி.




'கூட்டு வாழ்க்கை முறையில் வளர்ந்த நாம், புலம்பெயர் நாடுகளின் சமூகங்களோடு ஒட்டவும், வெட்டவும் முடியாமல் அவதியுறும் மனநிலை சொற்களுக்கு அப்பாற்பட்டவை. இந்த நிழலின்கீழ் பிறந்த கவிதைகளே இவை' என ரவி (பாலமோகன்) கூறியுள்ளார்.

புலம்பெயர்ந்த வாழ்வின் அவஸ்தைகளை அவலங்களை சோகங்களை கவிதையில் கொண்டு வந்திருக்கும் பாலமோகன் தன்னைப் பற்றிய, தனது கவிதை பற்றிய சுய மதிப்பீடு செய்து கொள்ளும் தகுதியுள்ளவராயிருப்பது, அவர் தனது படைப்பாற்றலை செப்பனிட தகுதி கொண்டவர் என்பதை சுட்டுகிறது.

கவிதையின் உள்ளடக்கம் உணர்வு நிலையில் இருந்து பரிணமிக்கும்போது, அதைக் கவிதையாய் பண்ணுவதற்கு தொடர்ந்த பயிற்சி தேவைப்படுகிறது. தொடர்ச்சியான விடாப்பிடியான பயிற்சி இன்மை என்பது தனது பிரதான குறைபாடு என்பதைத் தெரிந்து கொண்டிருப்பதோடு அதை வெளியிலே சொல்லவும் அவர் தயக்கம் காட்டவில்லை.

புலம்பெயர் வாழ்வின் அவலங்களை மட்டுமல்லாமல், புலம்பெயர்ந்து வாழும் ரவி (பாலமோகன்), தனது தாய் நாட்டின் துயரங்களையும் கவிதைகளில் கொண்டு வந்துள்ளார்.

"இயற்கையைத் தொலைத்த
எங்கள் மண்ணில்
இன்னமும்....

வானம் உமிழும்
இடியிலும் மின்னலிலும்
கவச வாகனங்களையும்
காக்கிச் சட்டைகளையும்
இப்போ காண்பதில்லைத்தான்!

ஆனாலும்
பயங்கரம் உறங்கும்
மௌன இரவில்
காலடிச் சத்தமும்
நாயின் உறுமலும்
இப்போதும்
இதயத்துள் இறங்கும்!
நிலவின் வார்ப்பில்
மரத்தின் நிழலும்
துவக்குடன் அசையும்.

யுத்தத்துள் நீண்ட இருள்
மெல்ல வெளுத்த
கருக்கல் பொழுது!
சூரியன் எழும்ப மறுப்பதால்
கிழக்கைத் தேடி
மிரளும் விழிகளுடன்
மனிதர்கள்
இன்னமும்.... இன்மும்...."

என 1990/91 காலப் பகுதியில் அவர் எழுதியுள்ள கவிதை எமது தேசத்தின் நிலைமைகளைக் கண் முன் கொண்டு வருவதாய் உள்ளது.

ஒரு தனிமனிதனின் அனுபவம் என்ற எல்லையைத் தாண்டி, ஒரு சமூக அனுபவம் என்ற கோட்டை எட்டினால் மட்டுமே கவிதைக்கு அர்த்தம் இருக்கும் என அவரே குறிப்பிட்டதுபோல இக் கவிதைத் தொகுதியில் சமூக அனுபவத்தினை பிரதிபலிக்கும் கவிதைகள் பல உள்ளன.

---

**புத்தகம் : மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம்.**
**ஆசிரியர் : க. மகேஸ்வரலிங்கம் (பீ.ஏ.)**
**வெளியீடு : தில்லை வெளியீடு, மகிழடித்தீவு.**
**பக்கங்கள் : 129.**
**விலை : 100 ரூபா.**




தனது ஊரான மகிழடித்தீவை இணைத்து மகிழடி மகேசன் என்ற புனைபெயரில் கவிதைகளையும் மற்றும் பல ஆக்கங்களையும் எழுதி வரும் கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம் அவர்கள் மட்டக்களப்பு சிறு தெய்வழிபாடு ஓர் அறிமுகம் என்ற சமய ஆய்வு நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பில், தேவநாயகம் கலை அரங்கில் இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. வடக்கு கிழக்கு மாகாண சபையின் கலாசார உதவிப்பணிப்பாளர் செ. எதிர்மன்னசிங்கம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நூல் பற்றிய ஆய்வு உரையாற்றிய கலாநிதி மௌனகுரு மகிழை மகேசன் அவர்கள் எப்போதும் தேடலில் ஈடுபட்டே இருப்பவர். அதன் விளைவே இந்நூலின் பிறப்பாகும் என்று கூறினார். இந்நூலானது நுண்கலைப் பட்டப்படிப்பில் ஈடுபடும் மாணவர்கட்கு பெரிதும் உதவக் கூடியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

---

ஆயுதங்களுக்கு எப்பொழுதுமே மக்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், மக்களுக்கு எப்பொழுதாவது மட்டுமே ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. - ஃபிடல் காஸ்ட்ரோ

---

# பிள்ளைகளை காப்பாற்றவாவது....

(பின்பக்கத் தொடர்ச்சி)

வழிவகுக்கும் என்பதையும் அரசு உணர்ந்து செயற்பட வேண்டும்.

மிக அண்மையில் பிரித்தானிய அரசின் ஆசியப் பிரதிநிதியான Fox என்பவரும் இனப்பிரச்சினையைத் தீர்க்க இங்கிலாந்து மத்தியஸ்தம் வகிக்கத் தயாராக உள்ளதாக கூறியுள்ளார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் உதறியெறியப்படாது பாவிக்கப்பட வேண்டுமென்றே ஈ.பி.ஆர்.எல்.எப். கருதுகின்றது.

இங்கிலாந்தின் மத்தியஸ்தத்தை புலிகள் வரவேற்றிருக்கும் அதேசமயம், அரசு இது தொடர்பாக மௌனமாகவே உள்ளது.

இலங்கையை கைப்பற்றி 300 வருடகாலமாக இலங்கையை ஆண்டவர்கள் பிரித்தானியர்கள். இதனால் இலங்கையின் வரலாற்றைப் புரிந்துகொண்டவர்கள் மாத்திரமல்ல, இலங்கையின் வரலாற்றை தமக்கேற்றாற்போல் மாற்றியவர்களும் அவர்களே.

இதனால் இனப்பிரச்சினையின் இன்றைய நிலை எவ்வாறு தோன்றியிருக்கும் என்பதை வரலாறு பூர்வமாகவே உணரக்கூடிய வாய்ப்பினை பெற்றவர்கள் பிரித்தானியர்.

இந்நிலையில் அவர்கள் இப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தமை மிகவும் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

எமது அயல்நாடான இந்தியா, இப்பிரச்சினையில் கடந்தகாலங்களில் நேரடியாகத் தலையிட்டிருந்தபோதும் கூட, இன்று எமது பிரச்சினைகளில் இருந்து விலகி இருக்கவே விரும்புகின்றது.

டெல்லியில் இருக்கும் பலவீனமான மத்திய அரசின் இயலாமை என்பது ஒருபுறமிருக்க, ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பாக புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கும் போது இந்தியா தலையிட்டு மத்தியஸ்தம் வகிப்பதென்பது இயலாத காரியமாகும்.

இந்நிலையில் இந்தியா தவிர்ந்த வேறொரு நாடோ அல்லது இந்தியா உட்பட கூட்டாக சில நாடுகளோ தான் இப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க முடியும். இங்கிலாந்து மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தது வரவேற்கக்கூடிய விடயமே.

யுத்தம் தொடர்வதானது அத்துமீறிய குற்றச் செயல்கள் தொடரவே வழிவகுக்கும்.

பாலியல் வன்முறைகள், கொலைகள், காணாமற் போதல், போன்ற மனித உரிமை மீறல்கள் ஆகியன அரசுதொடர்பான, அரசுகளின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான விமர்சனங்களையும் கண்டனங்களையும் உருவாக்கி உள்ளது.

எனவே யுத்தம் தொடரும் பட்சத்தில் இவை இன்னும் அதிகரிக்குமே தவிர குறைவுப் போவதில்லை. இது மேலும் மேலும் சிறீலங்கா அரசின் சமாதானத்திற்கான யுத்தம் என்ற முகத்திரையை கிழிக்கவே உதவி செய்யும்.

அதேசமயம் புலிகளும் யதார்த்த சூழ்நிலையை உணர்ந்து பேச்சுவார்த்தைக்கு முன்வராவிடின் தமிழ் மக்களின் அழிவும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

- க. செல்வராசா

படிப்பகம்

www.padippakam.com





# பதில்

## ஃபிரெட்ரிக் பிரௌன்

தங்கத்தைக் கொண்டு இறுதி இணைப்பை முறையாகப் பற்ற வைத்தார் ட்வார் ஈவ். அவரை ஒரு டஜன் டெலிவிஷன் கேமராக்கள் கவனித்துக் கொண்டிருந்தன. அவருடைய செயலியக்கத்தை ஒரு டஜன் படங்களாக, பிரபஞ்சம் முழுதும் கொண்டு சென்றது சப்ஈதர்.

ட்வார் ஈவ் நிமிர்ந்து ட்வார் ரெய்னைப் பார்த்துத் தலையசைத்தார். பின்பு ஸ்விட்சின் பக்கமாக நகர்ந்து நின்றார். –அவர் அச்சுவிட்சை முடுக்கியதும், தொடர்பு பூர்த்தியாகிவிடும்; பிரபஞ்ச வெளியில் ஜனங்கள் குடியேறியுள்ள 96 லட்சம் கோடி கிரகங்களிலுள்ள எல்லாவித பூதாகாரமான கணிக்கும் இயந்திரங்களையும் இந்த ஸ்விட்ச் ஒரு ஸுப்பர் சர்க்யூட்டுக்குள் ஒரே சமயத்தில் இணைத்துவிடும்; எல்லாவற்றையும் ஒரு ஸுப்பர் கால்குலேட்டருக்குள் – ஒரு சைபர்னெடிக் யந்திரத்துக்குள் – அனைத்து பால்வெளி மண்டலங்களையும் அனைத்து அறிவையும் இது ஒன்றிணைத்துவிடும்.

தம்மைக் கவனித்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்த கோடிக் கோடி மக்களுக்காகச் சுருக்கமாகப் பேசி முடித்தார் ட்வார் ரெய்ன். பின் சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டு, "தொடங்கி வை, ட்வார் ஈவ்" என்று கட்டளையிட்டார்.

ட்வார் ஈவ் ஸ்விட்சை இயக்கினார். பிரம்மாண்டமான 'ஹம்' சத்தம் –96 லட்சம் கோடி கிரகங்களிலிருந்து அலையலையாகப் பாய்ந்தது சக்தி. மைல் நீளமுள்ள அந்தப் பேனல் முழுக்க விளக்குகள் ஒளிர்ந்தன; அணைந்தன.

ட்வார் ஈவ், பின்னுக்கு நகர்ந்து ஆழ்ந்த பெருமூச்சொன்றை வெளியிட்டார்: "முதல் கேள்வியைக் கேட்கும் கௌரவம் உங்களுக்குரியது, ட்வார் ரெய்ன்."

நன்றி கூறிய ட்வார் ரெய்ன், "அக்கேள்வி எந்தவொரு சாதாரண சைபர்னெடிக் யந்திரத்தாலும் பதில் சொல்ல முடியாத ஒரு கேள்வியாக இருக்கும்" என்று கூறினார்.

பின்பு யந்திரத்தை நோக்கித் திரும்பினார். "கடவுள் இருக்கிறாரா?" என்று கேட்டார்.

கொஞ்சம் கூடத் தயங்காமல்–செய்தி அஞ்சலுக்கான ஒரு சிறு கிளிக்கிடலும் கூட இல்லாமல்–அந்தப் பிரம்மாண்டமான குரல் பதிலளித்தது: **"ஆம் இப்போது கடவுள் இருக்கிறார்."**

ட்வார் ஈவின் முகத்தில் திடீரென்று, பயம் மின்னலடித்தது. ஸ்விட்சைக் கைப்பற்றத் தாவினார் அவர்.

மேகமற்ற வானிலிருந்து ஒரு மின்னல் கீற்றுப் பிறந்து கீழிறங்கி, அவரைத் தாக்கியது. ஸ்விட்சை உருக்கி இணைத்து மூடியது.

– நன்றி: லயம்

ANSWER, FREDRIC BROWN
The Stars and Under, Edmund Cnispin (ed.),
Faber and Faber, 1975.

## ஜெயகாந்தன்

ஒரு எழுத்தாளன் என்கிற முறையில் எனது உரிமைகளை முன்வைத்துப் போராட நான் வெட்கப்படுகிறேன். ஏனெனில் இந்த உலகத்தின் உண்மையான சொந்தக்காரர்கள் எந்தவித உரிமையும் இல்லாமல், போராட்டங்களின் பெயரால் ஏமாற்றப்படுவதை நான் அறிவேன். உரிமைகளும் வசதிகளும் எல்லா மனிதர்களுக்கும் வந்த பிறகுதான் – இரண்டாம் பட்சமாகத்தான், இறுதியில் தான் அறிவு ஜீவிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அப்படி அல்லாமல் கிடைக்கிற உரிமையும் வசதியும் உள்ளூர அவனது ஆத்மாவில் எந்த வித நிறைவையும் ஏற்படுத்த முடியாது. மாறாக அது அவனது உள்ளுணர்வில் குற்ற உணர்வையே விளைவிக்கும்.



# வீடு திரும்புதல்

பையன் நாள் முழுவதும் விளையாடினான்.

கொஞ்ச நேரத்துக்கு முன்
தெரு விளக்குகள் எரியத் தொடங்கின.
இன்னும் ஏன்
அப்பா வீடு வந்து சேரவில்லை?

வீட்டை விட்டுப் போகும்போது
சம்பளத்தை வாங்கிக் கொண்டு
சீக்கிரமாகவே வந்து விடுவதாக
உறுதியாகச் சொன்னார்.
வரப்போகும் பண்டிகைக்கு
இன்று மாலை
அவர் பரிசுகள் வாங்க வேண்டும்.

போகும்போது அப்படித்தான் சொன்னார்.
ஆனால்,
இன்னும் ஏன் அவர் வீட்டுக்கு வரவில்லை?

அகன்றவாய்ச் சட்டியை ஒரு கரண்டி
தட்டுகிறது
அசாதாரணமான பெரும் ஒலி எழுகிறது
சோற்றை வடிக்கும்போது
கொதிக்கும் கஞ்சித் தண்ணீர்
காலில்பட்டுக் கொப்புளம் ஆகிறது.

பையன் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு
பாயில் உட்காருகிறான்.
சன்னல் வழி உற்றுப் பார்க்கிறான்.

பார்க்காத அவன் கண்களுக்கு முன்னே
வரலாற்றின் ஒரு பக்கம்
திறந்து கிடக்கிறது.

கடிகாரம் வேகமாக ஓடுகிறது
குழாய்த் தண்ணீர்
சொட்டுச் சொட்டாக விழுகிறது
மீசையுள்ள பூனை
சுவரைத் தாவிச் செல்கிறது.

புத்தகத்திலுள்ள எழுத்துக்கள்
அசைய மறுக்கின்றன.
அப்பாவால் செல்லம் கொடுத்துக்
கெடுக்கப்பட்ட பையன்
தன் புத்தாடைகளைப்
பண்டிகைக்கு முன்பே
வாங்கிவிட வேண்டும் எனக்
காத்திருப்பது போல
அவை பிடிவாதமாக இருக்கின்றன.

இன்னும் ஏன் அப்பா
வீடு வந்து சேரவில்லை?

வெகு நேரத்துக்கு முன்பே
சமையல் முடிந்து விட்டது
அம்மா குளித்துவிட்டு
உட்கார்ந்து பின்னத் தொடங்கிவிட்டாள்
இழைகள்
திரும்பத் திரும்பச்
சீராகச் சென்று கொண்டிருந்தன.

ஒரு சப்தம் :
கதவின் தாழ் திறக்கப்படுகிறது.

யார் அங்கே?
நான் தான் அம்மா

சந்தின் கோடியில்
வீட்டுக் கதவின் அருகே
பையன் நிற்கிறான்
ரேடியோவில்
செய்தி ஒலிபரப்பாகிறது.
இன்னும் ஏன்
அப்பா வீடு திரும்பவில்லை?

பையன் தெருவில் இறங்குகிறான்
அவன் போய்
அப்பாவைத் தேட வேண்டும்

சந்தியில் ஒரு கும்பல்
ஒரு கறுப்பு வாகனம்,
வாண வேடிக்கை போல
உரத்த, வேகமான அதிர் வேட்டுகள்.

அவர்கள் எதைக் கொண்டாடுகிறார்கள்?
அது என்ன என்று
பையன் பார்க்கப் போனான்.


இரவில் வெகுநேரம் கழித்து,
வெடி மருந்தின் புகை நாற்றம்
நிறைந்த தெருக்கள் வழி
இருளடைந்த சந்துகளைத் தாண்டித் தாண்டி,
சாவுக்குப் போக்குக் காட்டிவிட்டு,
அப்பா வீடு வந்து சேர்ந்தார்.

பையன் வரவே இல்லை.

**சுபாஷ் முகோபாத்யாயா**

ஆங்கிலம் வழி தமிழில் : **மோகனன்**

(சுபாஷ் முகோபாத்யாயா வங்க மொழியின் தலைசிறந்த கவிஞர். பிரசித்தமான அவர் கவிதைகளுள் ஒன்று இது. 1984 ல் சோவியத் நாட்டுப் பரிசு அவருக்கு அளிக்கப்பட்டது.)




கொரில்லா குரங்குகளை சேகரிக்கும் ஒருவர் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். அங்கே ஒரு குடிசையில் உள்ள பெரிய வேட்டைக்காரனிடம் "ஒரு கொரில்லாவைப் பிடித்துக் கொடுக்க எவ்வளவு கேட்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவன்,"எனக்கு ஐநூறு டொலர், என்னுடன் துப்பாக்கியுடன் வரும் அந்த குள்ளப் பையனுக்கு ஐநூறு டொலர், அடுத்து வேட்டைக்கு வரும் என் நாய்க்கு ஐநூறு டொலர் – ஆக ஆயிரத்து ஐநூறு டொலர் வேண்டும்" என்றான்.

அந்த கொரில்லா சேகரிப்பவர் எதற்கு நாய்க்கு ஐநூறு டொலர் தரவேண்டும் என்று குழம்பினார். சரி எப்படிப் பிரித்துக் கொண்டால் நமக்கென்ன என்று அவர் அவன் கேட்ட தொகைக்கு சம்மதித்து விட்டார்.

வேட்டைக்குச் சென்றார்கள்.

ஒரு மரத்தில் கொரில்லா உட்கார்ந்திருப்பதை உணர்ந்த வேட்டைக்காரன், மெதுவாக மரத்தின் மேலேறி கொரில்லாவின் பின்பக்கமாகச் சென்று அதன் தலையில் ஓங்கி அடித்தான். அது மயக்கமுற்றுக் கீழே விழுந்தது. அப்பொழுது அவனுடைய நாய் ஓடிவந்து அந்தக் கொரில்லாவின் பால் உறுப்பை வாயால் இறுக்கிக் கௌவிப் பிடித்து, அதை நகர விடாமல் செய்து விட்டது. பிறகு மரத்திலிருந்து இறங்கி வந்த வேட்டைக்காரன் ஒரு கூண்டுக்குள் அந்தக் கொரில்லாவை அடைத்தான்.

இதைக் கண்டு அசந்து போனார் கொரில்லா சேகரிப்பவர்.

"ரொம்பப் பிரமாதம். இதைப் போன்ற ஒரு டெக்னிக்கை நான் பார்த்ததே இல்லை. உனக்கும் அந்த நாய்க்கும் தலா ஐநூறு டொலர் தகும்" என்று சொல்லி விட்டு, "அந்த துப்பாக்கி ஏந்திய குள்ளனுக்கு வேலையே இல்லையே" என்று கேட்டார்.

"அதுபற்றிக் கவலைப் படாதீர்கள். பிறகு உங்களுக்குப் புரியும்" என்றான் வேட்டைக்காரன்.

கொரில்லா வேட்டை தொடர்ந்து அந்தக் காட்டில் நடந்து வந்தது.

இவர்கள் எப்படிப் பிடிக்கிறார்கள் என்பதை ஒரு புத்திசாலி கொரில்லா பார்த்துக் கொண்டிருந்தது.

வேட்டைக்காரன் அந்தக் கொரில்லா இருந்த மரத்தில் ஏறி, பின்னால் வந்து வழக்கம் போல கொரில்லாவின் தலையில் அடிக்கப் போகும்போது...கொரில்லா முந்திக் கொண்டது. அவனைத் தலையில் அடித்துக் கீழே தள்ளியது.

கீழே விழும்போது வேட்டைக்காரன் துப்பாக்கி ஏந்திய குள்ளனைப் பார்த்துக் கத்தினான் "அந்த நாயை உடனே சுடு."

பொதுவானதாக, சுதந்திரமானதாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் நிறுவனங்களின் செயல்பாடுகளை விமர்சித்து அதன்மூலம் அதனுள் எளிதில் புலப்படாவண்ணம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் வன்முறையை வெளிப்படுத்துவதுதான் இன்றைக்கு உண்மையான அரசியல் இலக்காக இருக்க முடியும்.

– மிஷேல் ஃபூக்கோ –

www.padippakam.com



# சமுர்த்தி

சந்திரிகா அரசாங்கம் கீழ்மட்டத்தில் உள்ள மக்களை மேம்படுத்தும் பொருட்டு சமுர்த்தி (செழிப்பு) என்னும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவது யாவரும் அறிந்ததே. இதனடிப்படையில் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் மூன்று பேரை சமுர்த்தி அலுவலர்களாக தெரிவுசெய்து அதனூடாக அக்கிராமம் தொடர்பான முழுமையான தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. வேலை இல்லாதோர், வீடில்லாதோர் போன்ற தரவுகளுடன் அவர்களது பொருளாதார நிலமைகள் போன்றவை தொடர்பாகவும் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

வடகிழக்கு தவிர்ந்த சகல இடங்களிலும் இவை 1995ம் ஆண்டு முதலே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வடகிழக்கில் யுத்தத்தை காரணம் காட்டி இது பின்போடப்பட்டாலும், ஈ.பி.ஆர்.எல்.எப். உட்பட சகல தமிழ் கட்சிகளின் வற்புறுத்தலால் கிழக்கு மாகாணம், மற்றும் வவுனியாவில் இதன் முதற்கட்ட வேலைகளை நகர்த்துவதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்தார். இதற்காக ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்பட்டனர். இது பெருமளவில் அரசியல் கட்சிகளின் சிபார்சிலேயே நடைபெற்று வருகின்றது.

மட்டக்களப்பு, திருமலை, வவுனியா போன்ற இடங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி., புளொட், த.வி.கூ., பொ.ஐ.மு. முதலியவை சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான ஆட்களை சிபார்சு செய்தது. இவற்றிலிருந்து ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுக்கும் ஒருவரை நியமிப்பது என்ற முடிவையும் அமைச்சர் எடுத்தார். ஆனால் கிழக்கு மாகாணத்தில் சகல சிராமசேவகர் பிரிவுகளுக்கும் தாம் சிபார்சு செய்யும் ஆட்களை மாத்திரம் தான் நியமிக்க வேண்டும், வேறு கட்சிகள் கொடுக்கும் நியமனங்கள் ஏற்றுக் கொள்ளப்படக்கூடாது என்பதில் திருமலை மாவட்ட கூட்டணி அங்கத்தவர் தங்கத்துரை உட்பட மட்டக்களப்பின் ஜோசப் பரராஜசிங்கம், துரைசிங்கம், செல்வராஜா ஆகியோர் விடாப்பிடியாக நிற்பதாக நம்பிக்கையான வட்டாரங்களூடாக அறியப்படுகின்றது. ஏற்கனவே கடந்த இரண்டு வருடங்களாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வடகிழக்கை தவிர்ந்த ஏனைய இடங்களில் நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள். வடகிழக்கில் அது அமுலில் இல்லை. மிகவும் வற்புறுத்திய பின்னரே அரசு முதற்கட்டமாக கிழக்கிலும் வவுனியாவிலும் கொடுக்க இணங்கியது. இதனை தமிழர்விடுதலைக் கூட்டணியின் பா.உ.க்கள் தடைசெய்வதானது தமிழ் மக்களுக்கு இழைக்கும் துரோகத்தனமாகும். அரசியல் ரீதியில் தனது கொள்கைகளை வலியுறுத்தி தனது அரசியலை நடாத்துவதைவிட்டு, நூற்றுக்கணக்கான நியமனங்களை தமிழ் இளைஞர்கள் யுவதிகள் பெற்றுவிடாமல் தடுப்பது தமிழ் சமூகத்துக்கே செய்யும் துரோகத்தனமாகும். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்கு ஏதாவதுஓர் வேலை கிடைக்காதா என்று ஏங்கித் தவிக்கும் போது அரசாங்கம் கொடுக்க முன்வந்த சமுர்த்தி நியமனங்களை குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தடுப்பது விசமத்தனமானது.

த.வி.கூட்டணி கிழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்தபோதும் கூட, இன்னும் பல்வேறு கட்சிகளும் ஆயிரக்கணக்கான வாக்குகளைப் பெற்றிருந்தன என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இந்நிலையில் தாம் சிபாரிசு செய்வோருக்கு மாத்திரம்தான் வேலை கொடுக்கவேண்டும், இல்லையேல் யாருக்கும் கொடுக்க கூடாது என்பது, நியாயமில்லாதது மாத்திரமல்ல, மிகவும் அசிங்கமானதும் கூட. இதனையேன் கூட்டணி புரிந்து கொள்ளக் கூடாது? கூட்டணிக்கு வாக்களித்த மக்கள்தான் அவர்களிடம் கேட்கவேண்டும்.



# மன்னார் - கற்பிட்டி போக்குவரத்து
# கற்பிட்டியில் பொலிசார் சோதனைமேல் சோதனை
# பிரயாணிகள் தொடர்ந்தும் வேதனையில்...

மன்னார் இராணுவ, பொலீஸ் நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதியாகும். இங்கு வசிக்கும் மக்களும் வேறு பகுதியிலிருந்து மன்னார் செல்வோரும் முதலில் பொலீசில் தமது பெயர்களை பதிவு செய்த பின்னே அங்கு தங்க அனுமதிக்கப்படுகின்றனர்.

அத்தகைய ஒரு பகுதியிலிருந்து அரசின் கட்டுப்பாட்டிலுள்ள கற்பிட்டி ஊடாக அவசரஅலுவல்கள் நிமித்தம் பிரயாணம் செய்யும் அப்பாவி மக்கள் அனாவசியமாக் தடுத்து வைப்புகளுக்கும் சோதனைகளுக்கும் உள்ளாகிறார்கள்.

சாதரணமாக மன்னார் நகரத்திலிருந்து பிரயாணத்தை ஆரம்பிக்கும்ஒரு பயணி, தாழ்வுபாட்டில் படகில் ஏறுவதற்கு முன்பு குறிப்பாக மூன்று இடங்களில் பூரண சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்பே பிரயாணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றார். இதேபோன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னாரின் ஏனைய பகுதியிலிருந்து பிரயாணத்தை மேற்கொள்பவர், 3 தொடக்கம் 6 வரையான சோதனைச் சாவடிகளில் சோதனைக்குட்படுத்தப்படுகிறார்.

இதற்கும் மேலாக, பிரயாணம் செய்ய இருப்பவர்கள் மூன்று நாட்களுக்கு முன்பே தமது பிரயாண அனுமதி கோரி அரச அதிபர் ஊடாக பாதுகாப்பு படையினருக்கு விண்ணப்பித்து பொலீஸ் அத்தியட்சகரின் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றே பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். இவ்விதம் விண்ணப்பித்து, தகுந்த காரணம் இல்லையென பிரயாண அனுமதி மறுக்கப்படுவதும் உண்டு.


இவ்விதம் பிரயாணத்தை மேற்கொள்ளும் பிரயாணிகளின் பட்டியல் கற்பிட்டியில் கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டு அதனடிப்படையில் பிரயாணிகள் பரிசோதிக்கப்பட்டே படகிலிருந்து தரையிறக்கப்படுகின்றனர். இவ்விதம் தகுந்த அனுமதிப் பத்திரங்களின்றி மன்னாரிலிருந்து செல்லும் படகிலிருந்து யாரும் கற்பிட்டியில் தரையிறங்க முடியாது.

ஆனால் இம்மாதத் தொடக்கத்திலிருந்து கற்பிட்டிப் பொலீசார் தேவையற்றதோர் நடவடிக்கையை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். கடற்படையினரின் பரிசோதனைகள் பூர்த்தியான பின்பும் பொலீசார், அனைவரினதும் அடையாள அட்டைகளை மீளப்பெற்று அவசியமற்ற சோதனைக்காக மேலும் பல நாட்கள் தடுத்து வைக்கின்றனர். இதற்கு நோயாளிகள் அரச அலுவலர்கள் அவசர அலுவலாகச் செல்வோர் அனைவரும் ஆளாகின்றனர்.

இவ்விதம் தகுந்த ஆதாரங்கள் சமர்ப்பிக்க முடியாதவர்களை மன்னாருக்கே மீண்டும் திருப்பியனுப்பும் நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளன.

யுத்தக் கெடுபிடியில் சிக்குண்டு பொருளாதாரப் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் தமது அவசிய அலுவல்களின் நிமித்தம்வரும் அப்பாவி மக்களை இவ்விதம் திருப்பியனுப்புவதென்பது ஒரு மனிதஉரிமைமீறல் நடவடிக்கையாகவுள்ளது. அவ்விதமே அவர்களை பல தினங்கள் கற்பிட்டியில் தடுத்து வைப்பதென்பதுவும் மிகவும் அநியாயமான செயலாகவுள்ளது. இது பிரயாணிகளை மேலும் வேதனையிலாழ்த்துவதுடன் ஏற்கனவே அதிகமாகவுள்ள மன்னார் கற்பிட்டி பிரயாணச் செலவை இருமடங்காக்கும் செயலாகவும் அமைந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அரச உயர்மட்டங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும் கவனிப்பாரற்ற நிலையில் மக்கள் காலத்தையும் பணத்தையும் செலவுசெய்து இச்சோதனைக் கெடுபிடிகளால் வேதனைப்படுவது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஒரு மாவட்டத்தின் பொலீஸ் அத்தியட்சகரின் அனுமதிப்பத்திரத்துடன் பிரயாணம் செய்பவரை இன்னோரிடத்தில் தடுத்துவைத்து பரிசோதிப்பதானது அர்த்தமற்ற ஓர் அனாவசிய நடவடிக்கையாகும். இதை சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும்.




# பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காவது பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள்!

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தியும், சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் நிலைப்பாடும் இலங்கையில் யுத்தம் தொடர்ந்துகொண்டுபோவதற்கான சமிக்ஞைகளாகவே தோன்றுகின்றன.

இருபகுதியினருமே பல்வேறுபட்ட முன்நிபந்தனைகளை விதிப்பதன் மூலம் பேச்சுவார்த்தை என்ற தடத்தில் இருந்து தூரவிலகிச் செல்வதாகவே தோன்றுகின்றது. இனப் பிரச்சினைக்கு நீதியான தீர்வு காணப்படவேண்டும், இவை பேச்சுவார்த்தை மூலம் மாத்திரமே சாத்தியமானது, யுத்தத்தினூடாக அல்ல என்பதை இரு பகுதியினரும் உண்மையாகவே ஏற்றுக் கொண்டால், பேச்சுவார்த்தை ஒன்றும் கடினமான விடயமல்ல.

சர்வதேச ரீதியாக தனது யுத்தத்திற்கு அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமாதானத்திற்கான யுத்தம் என ஜனாதிபதி செயற்படுவதும், சிறீலங்காவை யுத்தத்தின் மூலம் வெற்றிகொள்வதால் மட்டுமே தமிழீழத்தை ஏற்படுத்த முடியுமென புலிகளும் சிந்திக்கும்வரை பேச்சுவார்த்தை சாத்தியமல்ல.

பேச்சுவார்த்தை என்பதை, தம்மைப் பலப்படுத்திக்கொள்ள ஒரு தந்திரோபாயமாகவே புலிகள் இதுவரை பயன்படுத்தி வந்துள்ளனர். இது தொடர்பாக சிறீலங்கா மாத்திரமல்லாமல் சர்வதேச நாடுகளும் புலிகள்மீது குற்றம் சுமத்தியுள்ளன.

எனவே இவற்றில் இருந்து விடுபட்டு, தாம் உண்மையான பேச்சுவார்த்தைக்கு தயாராய் உள்ளோம் என்பதை பிரபாகரன் தெளிவுபடுத்த வேண்டும்.

இதேபோல் ஜனாதிபதி அவர்களும் நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைக்கு தான் தயார் என்பதை தெளிவான வார்த்தைகளில் வெளியிட வேண்டும். அரசின் நிலைப்பாடு தொடர்பான புலிகள் மாத்திரமல்ல, ஏனைய தமிழ் கட்சிகளும் முழு மக்களும்கூட கவலைகொண்டுள்ளனர்.

அரசு எவ்வளவு தான் சமாதானத்தைப் பேசியபோதும் யுத்த முனைப்பில் தீவிரமாக இருப்பதாகவே தோன்றுகின்றது. இது தமிழ் மக்கள் மத்தியில் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையீனங்கள் ஏற்படவே

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்